விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2035 | மார்கழி 10 | சனிக்கிழமை (25.12.2004) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 06

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

## மூன்றாவது மனித சங்கிலிப் போர் கொடிகாமத்தில் மக்கள் எழுச்சி

### கொட்டிய மழையிலும் உரிமைக் கோஷம் முழங்கியது

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டு வரும் மனிதச் சங்கிலிப் போராட்டத்தின் மூன்றாவது போராட்டம் நேற்று கொடிகாமத்தில் நடைபெற்றது.

கொடிகாமம் சந்தியில் இருபுறங்களிலும் திரண்டிருந்த மக்கள் கைகளைக் கோர்த்து பல்வேறு வாசகங்கள் எழுதிய அட்டையை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டத்தில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

தென்மராட்சி பொதுஅமைப்புக்களின் சமாசத் தலைவர் சற்குணத்தின் தலைமையில் நடைபெற்ற இம் மனிதச்சங்கிலிப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினர்களான எஸ். கஜேந்திரன், சிவ

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தர சமாதானம் அண்மித்துவிட்டது

### நத்தார் செய்தியில் ஜனாதிபதி நம்பிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானம் மலர நாம் அனைவரும் கைகோர்த்து செயற்படவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நத்தார் செய்தியில் தெரிவித்துள்ளார்.

சண்டைகள் இன்மையும் ஐக்கிய ஒற்றுமை, இணக்கம் என்பன மிகுந்திருப்பதையும் சமாதானம் எனப் பொருள் கொள்ளலாம். மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு என்பனவற்றின் மூலம் எமது நல்லியல்புகளையும் நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருப்பதற்குரிய நேரம் இதுவாகும்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கு தெளிவான நிகழ்ச்சிநிரலை அரசாங்கம் முன்வைக்க வேண்டும்!

### புலிகள் அரசுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

(கிளிநொச்சி)

**சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக அரசாங்கம் தெளிவானதும் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டதுமான நிகழ்ச்சி நிரல் ஒன்றை முன்வைக்க வேண்டுமென்று தமிழீழ விடுதலைப் புலிகள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவென கடந்த வாரம் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் மூலம் பயனற்ற ஒரு நிகழ்ச்சி நிரலை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்தது.

அந் நிகழ்ச்சி நிரல் யோசனையை நுணுக்கமாக ஆராய்ந்த விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் அதனை நிராகரித்துள்ள நிலையில் அரசாங்கத்தின் அவ் நிகழ்ச்சி நிரல் யோசனைக்கு பதிலளிக்கும் முகமாக மேற்கண்டவாறு கோரிக்கையை விடுத்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவென அரசாங்கம் எதுவித உள்ளடக்கமும் அற்ற உப்புச்சப்பற்ற வெற்று யோசனையை புலிகளுக்கு அனுப்பி வைத்திருந்தது. அவ் யோசனையை நிராகரித்துள்ள விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையின் ஆரம்பத்துக்கு அடிப்படையாக புதிய ஆக்கபூர்வமான நிகழ்ச்சி

(14 ஆம் பக்கம் பார்க்க)




## யாழ். சட்ட உதவி மன்றம் முன்பாக நேற்று மறியல்!

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கடந்த 1996, 1977 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோரின் பெற்றோர்கள் நேற்றுக் காலை யாழ். பிராந்திய சட்ட உதவி மன்றத்தின் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பெற்றோர் மற்றும் உறவினர்கள் கலந்துகொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டோர் பின்வரும் சுலோகங்களை தாங்கியிருந்தனர்.

"கைதாகிக் காணாமல்போனோர் விடயத்தில் சட்ட உதவி மன்றம் மௌனம் சாதிப்பதேன்", 'காணாமல் போனவர்களுக்கு உதவ சட்ட உதவி மன்றம் தமிழ் மண்ணில் அவசியமா?' போன்ற வாசகங்கள் எழுதிய சுலோக அட்டைகளை அவர்கள் தாங்கியிருந்தனர். (ச-19,5)



## மட்டு. நகரில் இருந்து கிளிநொச்சிக்கு நேற்று 50 புலிப் போராளிகள் வருகை!

### பெண்போராளிகள் வருகையில் சர்ச்சை தொடர்கிறது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து விடுதலைப்புலிப்போராளிகள் 50 பேர் நேற்று தரைவழியாக கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

இவர்களில் பெண்போராளிகள் எவரும் இடம் பெறவில்லை. செங்கலடி பதுளை வீதி கொடுவாமடு பாலத்தில் அமைந்துள்ள இராணுவ முன்னணிக் காவலரணிலிருந்து ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடிவரையும் போராளிகளுக்கு போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் வழித்துணையுடன் இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கினர்.

நேற்று முன்தினம் 20 பெண் போராளிகள் உட்பட 50 போராளிகள் மட்டக்களப்பிலிருந்து கிளிநொச்சிக்கு புறப்படத் தயாராகியிருந்தனர். எனினும், பெண் போராளிகளின் இடுப்புப்பட்டி விவகாரத்தினால் அப் பயணம் தடைப்பட்டிருந்தது. இடுப்புப்பட்டி விவகாரத்திற்கு முடிபு எதுவும் காணப்படாமையினால் பெண் போராளிகள் எவரும் நேற்று கிளி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 14 இந்திய மீனவர் நேற்று விடுதலை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றத்திற்காக இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு யாழ். சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 14 இந்திய மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டார்கள்.

இம் மீனவர்களுக்கு எதிராக வழக்கு தொடர போதிய ஆதாரங்கள் இல்லையென இலங்கை சட்டத்துறை தெரிவித்ததை அடுத்து மல்லாகம், ஊர்காவற்றுறை நீதிமன்றங்கள் இவர்களை விடுதலை செய்துள்ளது.

நீதிமன்ற உத்தரவின்படி விடுதலை செய்யப்பட்டவர்கள் அனைவரும் காங்கேசன்துறை கடற்படை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவின் ஆயுதக் கொள்வனவை இலங்கை நிறுத்த வேண்டும்

### அமெரிக்கா உத்தரவு

சீனாவிடம் இருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்வதை இலங்கை அரசாங்கம் உடனடியாக நிறுத்தவேண்டும் என அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் நீண்ட காலமாக சீனாவிடம் இருந்து கடன் அடிப்படையிலும் ஒப்பந்த அடிப்படையிலும் ஆயுதங்களை கொள்வனவு செய்து வருகின்றது.

இவ்வாறு கொள்வனவு செய்வதை உடனடி யாக நிறுத்துமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

சீன நாட்டின் இராணுவ அதிகாரிகளின் இலங்கைக்கான இரகசிய பயணம், சீனாவுடனான இரகசியத் தொடர்புகளுமே இவ் உத்தரவுக்கு காரணமாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-8)

# இன்று ஒரு தகவல்

## காலம் தவறாமை

மக்கள் நடமாட்டம் அதிகமில்லாத ஒரு சாலையில் காந்திஜி ஒருநாள் வேகமாக நடந்து போய்க் கொண்டிருந்தார். குஜராத் வித்தியாபடத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நடக்கப்போகிறது. அதில காந்தியும் கலந்து கொள்ளவேண்டியிருந்தது. அவரை அழைதது்க் கொண்டுவர உரியநேரத்தில் வாகனம் வந்து சேரவில்லை.

வாகனம் வரவில்லை என்று தெரிந்ததும் காந்தியடிகள் சபர்மதி ஆச்சிரமத்தில் இருந்து கால் நடையாகவே புறப்பட்டுவிட்டார். ஆச்சிரமத்திற்கும் வித்தியாபடத்திற்கும் அதிக தூரம். தெருவில் மக்கள் நடமாட்டமில்லை. அதனால் வாகனம் கிடைப்பதற்கும் வழி இல்லை.

அதனால் நடந்தே புறப்பட்டுவிட்டார். சிற'து தூரம் போயிருபபார். அப்போது ஒருவர் கதர் உடை போட்டிருநதவர் சைக்கிளில் போய்க்கொண்டிருந்தார். அவரிடம் காந்திஜி ''நான் வித்தியா படத் திற்குப் போக வேண்டும் உங்கள் சைக் கிளைத் தருகிறீ ர்களா?'' என்றார். அவர் உடனே சைக்கிளைக் கொடுத்தார்.

காந்தியடிகள் எப்போதோ தென் ஆபிரிக்காவில் இருந்த காலத்தில் சைக்கிள் ஓடிப்பழகினார். இந்தியாவில் அதற்குச சந்தர்ப்பமே கிடைக்க வில்லை. இப்போது தான் அதற்குச் சந்தர்ப்பம் கிடைத் துள்ளது. சைக்கிளில் ஏறி குறித்தநேரத்திற்கு அந்தக் கூட்டத்திற்கு வந்து சேர்ந்துவிட்டார்.

முழுத்துண்டு அணிந்து கொண்டு திறந்த உடலுடன் சைக்கிளில் ஏறி காலம் தவறாமல் சரியான நேரத்திற்கு வந்து சேர்ந்த காந்தியடி களைப் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்பட்டனர்.

காலம் தவறாமை என்பது ஒரு சிறந்த பண்பு. அது எல்லோருக்கும் சுலபமாக வந்து விடாது. ''என்னப்பா நேற்று கூறினேனே அந்தக் காரியம் என்னவானது?'' என்று கேட்டால் ''அதற்குள ஏன் அவசரப்படு கிறாய்? நாளைக்குப் பார்க்கலாம்'' என்று கூறுபவர்கள் தான் நம்மில் அதிகம்.

அமெரிக்க ஜனாதிபதி வாஷிங்டனுடைய செயலாளர் ஒருவர் ஒருநாள் காலதாமதமாக வந் தாராம். ஏன் லேட் என்று கேட்டிருக்கிறார். எனது கடிகாரம் மிகவும் மெதுவாக ஓடியிருக்கிறது அது தான் காரணம் என்றாராம். இதற்குப் பரிகாரம் என்னவென்றால் ஒன்று நங்கள் உங்களுடைய கைக்கடிகாரத்தை மாற்ற வேண்டும். அல்லது நான் எனது செயலாளரை மாற்ற வேண்டும் என்றார். ஜனாதிபதி.

கான் அப்துல்கபார் கான் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? வர்தாவில் நான் தங்கியிருந்த போது காந்திஜி குறித்த நேரத்தில் அலு வல்களை செய்து முடித்தமை என்னை மிகவும் கவர்ந்தது. சாப்பிடுவது, நடப்பது, பிரார்த்தனை செய்வது, தூங்குவது குறித்த நேரத்தில் செய்து முடித்து வ'டுவார் என்கிறார். ''நான் எங்கே போனாலும் குறிப்பிட்ட நேரத்திற்கு கால் மணி நேரம் முன்பாகவே போய்விடுவது வழக்கம். அந்தப் பழக்கம் தான் என்னை மனிதனாக்கி யுள்ளது என்கிறார் நெல்சன்.

மூன்று மணித்தியாலம் முன் கூட்டியே போனாலும் போகலாம். ஒரு நிமிடம் கூட பின் தங்கி விடக்கூடாது என்கிறார் ஷேக்ஷ்பியர். இந்தியாவுக்கு விடுதலை கிடைத்த சமயத்தில் டாக்டர் ராதாகிருஷ்ணர் என்ன சொன்னார் தெரியுமா? இன்று இரவு நமக்குச் சுதந்திரம் கிடைக்கப் போகின்றது. நாளையிலிருந்து நாம் செய்யும் தவறுகளுக்கு ஆங்கிலேயர்கள் மது பழி போட முடியாது என்றார். எல்லாம் சொல்லி என்ன பிரயோசனம்? இப்போதெல்லாம் காலம் தவறாமை சம்பந்தமாக யார் கவலைப்படுகிறார்கள்.

ஒருவர் அப்படித்தான் அவசரமாக அலுவலகம் புறபபட்டார். அலுவலகத்திற்கு நேரமாகி விட்டது. சக்கிரம் சாப்பாட்டை வை என்றார். இன்று சமையல் கொஞ்சம் தாமதமாகிவிட்டது. பழைய சோறு தான் உள்ளது அதனால் நங்கள் பக்கத்த'ல் உள்ள உணவு விடுதியில் சாப்பிடுங்கள் என்றார் மனைவி.

இவர் கொஞ்சம் யோசித்தார். பின்பு சொன்னார். ''சரி ஒன்று செய்கிறேன் முதலில் பழைய சோறு சாப்பிடுகிறேன். அதன் பின் உணவு விடுதிக்குப் போய் சாப்பிடுகிறேன். திரும்பி வருவதற்குள் உன் சமையல் முடிந்திருக்கும் அதைச் சாப்பிட்டு விட்டு அலுவலகம் செல்கிறேன்'' என்றார். இவரெல்லாம் எந்தக் காலத்தில் அலுவலகம் போய்ச் சேர்வது?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மெல்லவோ விழுங்கவோ முடியாமல் பெரும் திண்டாட்டத்தில் அரசாங்கம்

## ராஜித சேனாரத்ன எம்.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் தற்போது யுத்த சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அங்கு காணப்படும் சுவரொட்டிகள் தெரிவிக்கின்ற போதும் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தற்போதைய நிலையில் சர்வதேச நாடுகளை எதிர்த்துக்கொண்டு யுத்தமொன்றுககுச் செல்ல முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆட்சியில் உள்ள ஆளும் கூட்டமைப்பு அரசாங்கம் தனது எதிர்காலப் பயணத்தை மேற்கொள்ளாத வகையில் சிறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஜே.வி.பி. அரசாங்கத்தில் அங்கத்துவம் வகித்து அதில் இருக்கும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையினை மீண்டும் ஆரம்பிக்க முடியாத வகையில் அது நசுக்கப்பட்டுக் காணப்படுவதாக உலக நாடுகள் புது அரசிடம் விசனம் தெரிவித்துள்ளன. ரந்

இதேவேளை, ஜே.வி.பியினர் இல்லாமல் தொடர்ந்து ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்க முடியாது. ஜனாதிபதியாலும் முடியாது.

இத்தகைய இரு பெரும் நெருக்குதல்கள் இடர்களுக்கு மத்தியிலேயே கூட்டமைப்பு அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

அரசாங்கம் சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்காக ஜே.வி.பியை பகைத்துப புறந்தள்ள முடியாத ஓர் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறது என்றும் ராஜிதசேனரத்ன மேலும் சுட்டிக்காட்டினார். (ற-4)

# தென்மராட்சி பிரதேச மக்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவு

## உறுதியளித்தபடி அரசசெயலகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்து இதுவரை மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுத் தொகை வழங்கப்படாத அனைத்துக் குடும்பங்களிற்கும் ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் மீளக்குடியமர்விற்கான கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக தென்மராட்சிப் பிரிவு புனர்வாழ்வுப் பகுதியினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கொடுப்பனவுத் தொகைக்கான காசோலைகள் உரிய வங்கிக் கணக்குகளிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுளளது.

கொடுப்பனவினை மேற்கொள்ளுவதற்கான அறிவுறுத்தல் கடிதம் யாழ்.செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை தென்மராட்சி மக்கள் சிலர் தமக்கான மீள்குடியமர்வுக் கொடுப்பனவுகளை வழங்கக் கோரி யாழ். அரச செயலகம் முன்பாக மறியல் போராட்டங்களில் ஈடுபட்டனா.

இதனையடுத்து மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கல் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் என செயலக அதிகாரிகள் உறுதியளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ப-47)

# இராசிபலன்

**25.12.2004**
**(மார்கழி 10, சனிக்கிழமை)**
**சதுர்த்தசி மாலை 6.47 மணிவரை**
**ரோகிணி முற்பகல் 9.33 மணிவரை**
**சுபநேரம் 3.27 - 4.57 மணிவரை**
**இராகுகாலம் 9.27 - 10.57 மணிவரை**
**அமிர்த சித்தம்**
**திருவெம்பாவை 8ம் நாள்**
**நத்தார் பண்டிகை**

- **மேடம்**: தொழில் கஷ்டம், அமைதிக்குறைவு, எதிர்பாராத செலவு, ரிக்குரோகம்.
- **இடபம்**: திடீர் நன்மை, நண்பர்கள் சந்திப்பு, சயன சுகம், பெரியோர் ஆதரவு.
- **மிதுனம்**: எடுத்தகாரியம் தாமதமாகும், மனக் கிலேசம, தொழில் மந்த நிலை, போசன சுகக் குறைவு.
- **கடகம்**: காரிய சித்தி, தனலாபம், செய் தொழில் முன்னேற்றம், நண்பர்கள் உதவி.
- **சிங்கம்**: அதிகாரம், தூர தேசச்செய்தி, தொழில நன்மை, தடைப்பட்ட காரியம் கைகூடும்.
- **கன்னி**: பிரயாண கஷ்டம், முயற்சி தாமதம், ஆரோக்கியக் குறைவு, திடீர் பயணம்.
- **துலாம்**: கலகம், கௌரவக்குறைவு, பிரயாணம், காரிய தாமதம்.
- **விருச்சிகம்**: எடுத்த கருமங்கள் கைகூடும், செள்க்கிய விருத்தி, கீர்த்தி, நல்ல வருமானம்.
- **தனுசு**: உடல் நலம், மனமகிழ்ச்சி, பகைவர் நேசம், காரிய சித்தி.
- **மகரம்**: சிறு வியாதி, நண்பர்கள் விரோதம், வியாபார நன்மை, முயற்சி தாமதம்.
- **கும்பம்**: மனச் சோர்வு, உடல் நலக குறைவு, காரிய தாமதம், நண்பர்கள் சந்திப்பு.
- **மீனம்**: பிரயாண நன்மை, அந்நியர் சந்திப்பு, தொழில் நன்மை, சகோதரர் உதவி.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது — வளவன்

# மக்களின் வாழ்வை மேம்படுத்துவது எமது தலையாய பொறுப்பாகும்

## -கேணல் பானு

(மட்டக்களப்பு)

தமிழீழததேசியத் தலைவர் வே. பிரபாகரனின் வேண்டுகோளுக்கு அமைய மட்டக்களப்பு, அமபாறை மாவட்டங்களில் உள்ள போரினால நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய வகையில் புனர்வாழ்வுத் திட்டம் நடைமுறைப் படுத்தபபடுகின்றது என மட்டு.- அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் புனர்வாழ்வுத் திட்ட ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், மடடக்களப்பு மாவட்டத்தில் 4ஆயிரம் மாவீரர்களின் பெற்றோர்கள் இதற்காக இனங்காணப்பட்டுள்ளனர். எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. எமது மக்களின் பிரதான பிரச்சினை போஷாக்கின்மையேயாகும் எனத் தெரிவித்தார்.

மடடு.-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன,மட்டு. துணைத தளபதி பிரபா,புனர்வாழ்வுக்கழக திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் தமிழத்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ந-8)

# ஆர்மிடேஜ், கிறிஸ்ரீனா றொக்காவை மிலிந்த மொறகொட சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினா மிலிந்த மொறகொட ரிச்சர்ட் ஆர்மிடேஜ மற்றும் கிறிஸ்ரனா றொக்கா ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன், அமெரிக்க ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஜோன் பொல்டனையும் மிலிந்த மொறகொட சந்தித்துக் கலந்துரையாடியுளளார். இச் சந்திப்புக்களில் இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து கலந்துரையாடப் பட்டுள்ளது. மிலிந்த மொறகொட அமெரிக்காவுக்கு விஜயம் செய்வதற்கு முன்னர் பிரிட்டனுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் மற்றும் பொதுநலவாய நாடுகளின் அமைப்பு ஆகியவற்றின் பேரிலேயே அவர் பிரிட்டனுக்கு விஜயம் மேற்கொண்டார். இவ் விஜயத்தின்போது பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளரும் மிலிந்த மொற கொடவும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். (ற-8)

# பிரபாகரன் தலைமையிலான தமிழின விடுதலைப் போராட்டத்தை மிகவும் ஆதரித்தவர் நரசிம்மராவ்

## இரங்கல் செய்தியில் ஈழவேந்தன் எம்.பி.அனுபவத்தைப் பகிர்கிறார்

**இந்தியத் துணைக்கண்டத்தின் முன்னாள் பிரதமர் நரசிம்மராவின் இறுதிக்கால வாழ்வு இன்னல் நிறைந்ததாகவும் துன்பம் படிந்ததாகவும் இருந்ததை நாம் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. அவரின் இறுதிக்கால வாழ்வு எவ்விதம் அமைந்திருந்தது என்பதை நாடும் நானிலமும் நன்கு அறியும்.**

**எனினும் ஈழத்தமிழர் அரசியல வாழ்வைப் பொறுத்த வரையில் இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமராக விளங்கிய இந்திரா காந்தியின் அமைச்சரவையில் அமைச்சராக விளங்கிய இவர் ஆற்றிய பணி முக்கியத்துவம் வாய்நதது என்பதை நாம் மறுப்பதற்கில்லை.**

1983இல் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலையை அடுத்து



ஈழத்தமிழ் மக்கள் பட்ட இன்னலை நாம் எளிதில் எடுத்துரைக்க முடியாது. இலட்சக்கணக்கில் ஈழத் தமிழ மக்கள் நாட்டிலிருந்து வெளியேறி உலகெங்கணும் சிதறுண்டு வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஏறக்குறைய, இரண்டு இலட்சம் ஈழத்தமிழ் மக்கள் ஏதிலிகளாக தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்தனர். இலங்கையில் நடைபெறுவது இனப்படுகொலை என்று முதன்முதலாக இந்திரா காநதியின ஓங்கி ஒலித்த குரலும் இக்கால கடடத்தில் நடைபெற்றது. இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் படைத்த ஜனாதிபதியாக விளங்கிய ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை சந்திக்கும்படி நரசிம்மராவைத தூதுவராக அனுப்பி ஜே.ஆர்.இன் வெறியாட்டத்தை அடக்கினார் இந்திரா காந்தி.

இக் காலகட்டத்தில் 1983 ஆவணி 19 இல் இந்திரா காந்தியை டெல்கி வதிவிடத்தில் முதன் முதலாக சந்தித்த நான் ஈழத்தமிழ் சிக்கலைப் பற்றி விரிவாக உரையாடினேன். எம் உரையாடலை அடுத்து தன் செயலாளர் பி.சீ. அலெக்சாண்டரை அழைத்து என்னை நரசிம்மராவுடன் தொடர்புபடுத்தும்படி கூறியதோடு அவரைச் சந்திபபது இன்றைய சூழ்நிலையில் பயனளிக்கும் என்றும் எனக்குக் கூறினார்.

இந்திரா காந்தியின் வேண்டுகோளுக்கு அமைய நரசிம்மராவை சந்தித்தேன். எம் உரையாடலின் போது நரசிம்மராவ், ஜே.ஆர் இன் வெறியாட்டத்தைத் தாம் எப்படி அடக்கி ஆண்டார் என்பதை சுவை படக் கூறினார். ஆனால் இவை அனைத்தையும் மிஞ்சுகின்ற முறையில் இந்திய விடுதலைக்கு மகாத்மா காந்தி ஆற்றிய பணியை தாம் குறைத்து மதிப்பிடவில்லை என்று கூறிய அவர் பகவத்சிங், சுபாஸ் சந்திர போஸ், வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா ஆகியோர் ஆயுதம தாங்கி நடாத்திய போராட்டத்தை ஆதரித்ததோடு, தாமும் ஆயுதம் தாங்கி போராடியதையும் குறிப்பிட்டார்.

எனவே, வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் விடுதலைப் போராளிகள் நடாத்துகின்ற ஆயுதப் போராட்டத்தை தாம் மதிப்பதாகவும் ஆதரிப்பதாகவும் புன்முறுவலுடன் அவர் கூறிய கூற்று இன்று நினைவு கொள்ளத்தக்கது.

தமிழீழ விடுதலையும் இந்திய பாதுகாப்பும் பின்னிப் பிணைந்தது என்று அன்று இந்திரா காந்திக்கு கூறியதை நான் நினைவு படுத்தியபோது அக்கருத்து உண்மை என்பதை ஏற்றுக் கொண்டார். ஏனோ எம் தலைவிதி ஈழத்தமிழரை ஒட்டி இந்தியாவின் அணுகுமுறை இன்று பெருமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. எனினும், ஈழத் தமிழ் மக்கள் தான் இந்தியாவின் நிலைத்த உண்மையான நண்பர் என்பதை



இந்தியாவிற்கு காலம் உணத்தியே தீரும். (ப)

---

# ஆயுர்வேத வைத்தியசாலை பொறுப்பதிகாரியின் கவலை

(புங்குடுதீவு)

வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலுவலகத்தினால் நடாததப்பட்டு வரும் ஆயுள் வேத வைத்திய நிலையத்துக்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ் ஆயுர் வேத வைத்திய சாலையில் தாராளமாக மருந்து வகைகள் கையிருப்பிலுள்ளது. ஆனால் நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக ஆயுள்வேத வைத்திய நிலையத்துக்கு வருவதில்லையென பொறுப்பதிகாரி கவலை தெரிவித்துள்ளார்.

(ப-126)

---


## சிறு விளம்பரம்

### வைத்தியம்

இருதயநோய், நீரிழிவு, நரம் புத்தளர்ச்சி, வெண்புள்ளி, வாத நோய், சிறுநீரக நோய், ஆண், பெண பாலியல் குறைபாடு, குழந்தை நோய், தோல் நோய், சொராசிஸ் போன்ற எல்லாவகையான நோய்களுக்கும் சித்த மருந்துகள், எண்ணெய் வகைகள் பெற்றுக் கொள்ளலாம்.

பேரறிஞர் டாக்டர் பாலசுப்பிரமணியம் அவர்களை 25/12/2004-30/12/2004வரை நோயாளர் சந்தக்கலாம். சித்தவைத்திய ஆராய்ச்சி நிலையம், காங்கேசன்துறை வீதி, "பெரிய மதவடி", சுன்னாகம். (9138)


### மாசில்லாக் குழந்தைகள் திருவிழா

கத்தோலிக்க திருச்சபை எதிர் வரும் 28ஆம் திகதி மாசில்லாக் குழந்தைகள் திருவிழாவை சகல ஆலயங்களிலும் கொண்டாடவுள்ளது. ஏரோது அரசன் திவ்விய பாலன் யேசு பிறந்திருப்பதை அறிந்து நாட்டிலுள்ள 2 வயதுக் குட்பட்ட சகல குழந்தைகளையும் கொல்லுமாறு சேவகர்களுக்கு அறிவித்துக் கொன்றதை ஞாபகம் ஊட்டும் தினமாக இந்தத்தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (ற)

### ஒளி விழா

ஊர்காவற்றுறை மேற்கு வீதி முன்பள்ளியும் சனசமூக நிலையமும் இணைந்து கடந்த 22ஆம் திகதி புனித யாகப்பர் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள கலையரங்கில் பி.ப.3.00மணிக்கு ஒளி விழாவை நடாத்தின.

இவ் விழாவில் பங்குத்தந்தை அருட்திரு அன்ரனி ஞானப்பிரகாசம் அடிகள், அருட் சகோதரி மெற்றலின், சனசமூக நிலைய மூதத உறுபபினர் தங்கையா செப மாலை முத்து, ஆலய பரிபாலகர் அருமை நாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

சிறுவர்களில் கலை நிகழ்ச்சிகளும் இதில் இடம்பெற்றன. (ற)

---

# முதலாவது ஒருநாள் போட்டியில் இந்தியா 11 ஓட்டங்களால் வெற்றி

இந்தியா, பங்களாதேஷ் அணிகளிடையே சிட்டகொங்கில நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் இந்தியா 11 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.



நேற்று முன்தினம் நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் இந்திய அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

கங்குலியும் டெண்டுல்கரும் ஆட்டத்தைத் தொடக்கினர். கங்குலி ஓட்டமெதுவும் பெறாமலே விக்கெற்றை இழந்தார். தொடர்ந்து வந்த யுவராஜ்சிங் டெண்டுல்கருடன் இணைந்து இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். ஆயினும் டெண்டுல்கர் 19 ஓட்டங்களுடனும் யுவராஜ்சிங் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இந்நிலையில் இந்திய அணி 3 விக்கெற்றுக்களை இழந்து 45 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது. தொடர்ந்து வந்த ராவிட் மற்றும் கைவ் இருவரும் பொறுப்பாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினா. இவர்கள் நான்காவது விக்கெற்றுக்காக 124 ஓட்டங்களை எடுத்தனர். ராவிட் 53 ஓட்டங்களுடனும் கைவ் 80 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ராவிட்டுக்கு இது ஒரு நாள் போட்டிகளில பெறும் 55ஆவது அரைச்சதமாகும். கைவ்க்கு 10ஆவது அரைச்சதம்.

இறுதியாக பந்து வீச்சாளர்களான அஜித் அகார்கரும் இர்பான் பதனும் அடுத்தாடி 3 ஓவர்களில் மட்டும் 40 ஓட்டங்களை எடுத்தனர். அகார்கர் 24 பந்துகளில் 25 ஓட்டங்களை எடுத்தார். இர்பான்பதன் ஆட்டமிழக்காது 11 பந்துகளில 21 ஓட்டங்களை எடுத்தார். உதிரிகளாக 18 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்துவீச்சில் பாஷ்யா, நஷ்முல் உசைன் ஆகியோர் தலா 2விக்கெற்றுக்களையும் ரஹ்மான், காலித் மஹ்மூட், ரபீக் ஆகியோர் தலா 1 விக்கெற்றையும் வீழ்த்தினர்.

இந்தியா 50 ஓவர்களில் 8விக்கெற்றுக்களை இழந்து 245 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து தனது இன்னிங்சை ஆட களமிறங்கிய பங்களாதேஷ் அணி முதல் 3 விக்கெற்றுககளையும் 44 ஓட்டங்களுக்கே இழந்தது. ரபீக்-8, நவீஸ் இக்பால்-9, அஷ்ரபுல் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அவர்களைத் தொடர்ந்து இந்திய அணியைப் போலவே நான்காவது விக்கெற்றுக்கு ஜோடி சேர்ந்த ஹபிபுல் பஷார், 'அப்தாப் அஹமட இருவரும் இணைந்து ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். பஷார் 65 ஓட்டங்களையும் அஹமட் 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இறுதியாக ஆடிய காலித் மசூத், காலித் முஹமட் ஜோடி விளாசி அடித்து ஓட்டங்களை குவித்தது. இநநிலையில் பங்களாதேஷ் அணி வெற்றியடைந்துவிடுமோ என்ற அச்சம் இந்திய அணியிடையே ஏற்பட்டது. ஆயினும் அவர்களால் வெற்றி இலக்கை எட்ட முடியவில்லை. 50 ஓவர்களில் பங்களாதேஷ் அணியால் 8 விக்கெற்றுக்களை இழந்து 234 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. உதிரிகளாக 26 ஓட்டங்களை இந்திய அணி பங்களாதேஷ் அணிக்கு விட்டுக் கொடுத்திருந்தது.

பந்துவீச்சில் தமிழக வீரர் ஸ்ரீராம் 3 விக்கெற்றுக்களையும், அகார்



கர் 2 விக்கெற்றுக்களையும் இர்பான்பதன், ஜோகிந்தர் சர்மா ஆகியோர் தலா 1 விக்கெற்றையும் வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக கைவ் தெரிவு செய்யப்பட்டார். இப் போட்டியில் பங்களாதேஷ் அணி சிறப்பாக ஆடியுள்ளமை அணியின திறமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை உணர்த்துவதாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. இவ் வெற்றி மூலம் இந்திய அணி பங்களாதேஷிற்கு எதிராக 12 ஆவது தொடாச்சியான வெற்றியைப பெற்றிருக்கிறது. (7)

---

# இரண்டாவது டெஸ்ட் போட்டியில் லாங்கர் விளையாடுவது சந்தேகம்

அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஜஸ்டின் லாங்கர், பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவது சந்தேகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப் போட்டிக்காக பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது பந்தை எடுக்கக் குனிந்த லாங்கர் திடீரென ஏற்பட்ட முதுகுவலியால் மிகவும் சிரமப்பட்டார். உடனடியாக அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு முதுகுட் பகுதியில் அதிக வீக்கம் ஏற்பட்டிருப்பதாகவும் அவருக்கு ஓய்வு தேவை எனவும் டாக்டர் கூறியுள்ளார்.

இரண்டாவது போட்டியில் லாங்கா பங்குபற்ற 50 சதவீதமே வாய்ப்பு உள்ள நிலையில், அவர் பங்கு பற்றாவிட்டால் சைமன் கேடிச்சிற்கு அந்த வாய்ப்பு வழங்கப்படும். டெஸ்ட் போட்டி அணியிலிருந்து நீக்கப்பட்ட கேடிச் தேர்வாளர்கள் மனதில் தனது பெயர் இருப்பது மகிழ்ச்சியளிப்பதாகக் கூறியுள்ளார்.

முதல் டெஸ்ட் போட்டியில் லாங்கர், முதல் இன்னிங்ஸில் 191 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 97 ஓட்டங்களையும் எடுத்தமை குறிப்பிடத்தககது. இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை மெல்போனில் ஆரம்பமாகிறது. (7)

---

# பங்களாதேஷ் அணிக்கு ஐ.சி.சி. அநீதி இழைக்கிறது

பங்களாதேஷ் கிரிக்கற்ெ அணிக்கு ஐ.சி.சி.மிகப்பெரிய அநீதியை இழைக்கிறது என பாகிஸ்தான் முன்னாள கிரிகெற் வீரர் வசீம் அக்ரம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தொடர்ச்சியாக தோல்விகளையே சந்திக்கும் பங்களாதேஷ் அணிக்கு டெஸ்ட் அந்தஸ்த்து தேவையா என அதன் டெஸ்ட் அந்தஸ்தை ரத்துச் செய்வதைப்பற்றி பேசுவதைவிட, அந்த அணி கிரிக்கெறறில் வளர்ச்சியடையத தேவையான உதவிகளைச் செய்யவேண்டுமெனவும் வசீம் அக்ரம் கூறியுள்ளார்.

எந்தவித அடிப்படை வசதிகளும செய்து கொடுக்கப்படாமல் திடீரென டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்பட்டதால் பெரிய அணிகளை எதிர்கொண்டு விளையாட முடியாமல் அது திண்டாடுகிறது.

பந்து வீச்சாளர்களின் கை எந்தளவிற்கு வளைகிறது என்பதில காட்டும் அக்கறையை பங்களாதேஷ கிரிக்கெற் அணியின் வளர்சசியில் ஐ.சி.சி.காட்டுவதில்லை எனவும் அகரம் காட்டமாகக் கூறியுள்ளார்.

பெரிய தொகையை ஐ.சி.சி. பங்களாதேஷ் அணிக்காக ஒதுக்குவதுடன், அதன் தகுதிக்கேற்ப கென்யா, கனடா, ஹொலநது அணி



களுடன் விளையாட சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். இவ் அணிகளுடன் விளையாடி வெற்றிகளைட் பெறும்போதே உளவியல் ரீதியாக தன்னமபிக்கை பெற்று வீரர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள முடியுமெனவும் வசீம் அக்ரம் மேலும் தெரிவித்தார். (7)

# இருள் படர்ந்த வாழ்வில் மீண்டும்

மனுக்குலத்தை உயர்விக்க அவதரித்த இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பு இன்றைய சமாதானச் சூழ்நிலையில் மகத்துவமும், மகிழ்ச்சிகரம் மிக்கதானதாக

தவ சபைகளில் அதிகமானவை டிசம்பர் மாதம் 25ஆம் திகதியையே கிறிஸ்து பிறந்ததினமாகக் கொண்டாடுகின்றன.

கிறிஸ்துவுக்குப்பின் நான்



வும் கொண்டாடப்படுகின்றது.

இயேசுவின் பிறப்பு நாளன்று உலகத்தினுள்ள இறைவனின் படைப்புக்கள் அனைத்தும் குளிர்ந்து இருக்க வேண்டும். நதியும், தர்மமும் பரவசத்தினால நெகிழ்ந்திருக்கும்.

காம் நூற்றாண்டில் இருந்துதான் கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடத் தொடங்கினார்கள்.

கிறஸ்துவுக்குப் பின் 398இல வலன்மனியாலூஸ் என்னும் அரசன் வெளியிட்ட விடுமுறைப்

**"அஞ்சாதீர் இதோ மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற் செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன்.**
**இன்று தாவீதின் ஊரிலே உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார். அவரே ஆண்டவராகிய மெசியா"**

இறைவனின் பேரருள் இத்தினத்திலேயே தன் வரம்புகளைத தகர்த்து ஆறுபோல் பெருக்கெடுத்து அவனியில் ஓடும். ஆனால் கிறிஸ்து பிறந்து அன்று பெத்தலகேமில் இந்த பெருமிதங்கள் எதுவுமில்லாமல் அந்தக்கிராமம் எதையும் வெளிப்படுத்தாத வெறும் மண்ணாக ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததும் இன்னொரு அம்சமாகும்.

மண்டும் வருகின்றார். எம்மை மட்டெடுக்க மண்டும் வருகின்றார். நாம் பாவ உலகில் என்ன நிலையில் இருந்தாலும் எவ்வாறான துன்ப வாழ்வு வாழ்ந்தாலும் எமது இருள் சூழ்ந்த வாழ்வின் ஒளியாக, சோர் விழந்த எம் உள்ளங்களுக்கு நம்பிக்கையின் நட்சத்திரமாக மட்பர் பிரான் மண்டும் மனித உருவெடுக்கின்றார்.

உலகெங்கிலுமுள்ள கிறிஸ்

பட்டியலில் ஞாயிற்றுக்கிழமைகளும் உயிர்ப்பு ஞாயிறும் மட்டுமே அடங்கியிருந்தன.

நான்காம் நூற்றாண்டு வரை ஏன் கிறிஸ்மஸ் கொண்டாடப்படவில்லை என்ற கேள்வி எழலாம்.

மட்பு வரலாற்றில் கிறிஸ்துவின் துன்பங்கள், இறப்பு மற்றும் உயிர்ப்புக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் கிறிஸ்து பிறப்புக்கு அளிக்கப்படவில்லை. பிற்காலத்தில் எழுதப்பட்ட லூக்கா மற்றும் மத்தேயுவின் நற்செய்திகளில் தான் இயேசுவின் பிறப்பு இடம்பெறுகின்றது. திருத்தூதர் பவுலின் திருமுகங்களிலும் கிறிஸ்து பிறப்பைப்பற்றி எதுவும் கூறப்படவில்லை.

சூரியன் மகரரேகையை எட்டும் தினத்தை ரோமியர் சூரிய தேவனின் திருநாளாக டிசம்பர் 25ஆம் திகதியை கொண்

டாடினர். நதியின் கதிரவனான இயேசுவின் பிறப்பை இத்தினத்தில் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானதே!

இயேசுக்கிறிஸ்து பிறந்த பெத்தலகேம் கிராமம் நண்ட மலைச்சரிவின் நடுவே அமைந்திருக்கும் கிராமம். இக்கிராமம் பல யு,தேயாக் கிராமங்களிலும் பார்க்க மாறுபட்டது. இக் கிராமத்தின் கிழக்கே மலைப் பிரதேசம் பரந்து கிடக்கின்றது.

அங்கேதான் தாவதின் அரசன் இளைஞனாக இருந்த போது ஆட்டு மந்தைகளை மேய்த்தான். இங்குதான் ஆமோஸ் ஆண்டவரின் தர்க்கதரிசியும் முன்னர் ஆடு மேய்ப்பவராக இருந்தார். பெத்தலகேம் மிகவும் பழமைவாய்ந்த

## நத்தார் குடில்

கடவுள் மனிதனாக மாறினா என்பதைத் தனது மெய்யுணாவில் காணத்துடித்த புனித பிரான்சிஸ் அசிசி என்பவர் 1223 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதி கிரேச்சியோ என்ற மலையில் தனது சகோதரர்களுடனும், நணபர்களுடனும் மலைவாசிகளுடனும் இணைந்து உயிருள்ள குடிலை முதல் தடவையாக அமைத்தார்.

இதன் மூலம் அவர் கிறிஸ்துவின் பிறப்பை உலகுக்கு அறிமுகப்படுத்தி பன்னிரெண்டு நூற்றாண்டுகளாக இல்லாத ஒரு பழககத்தைத் திருச்சபைக்குக் கொண்டுவந்தார்.

சியைப் பகிர்ந்துகொண்டு உறவுகளையும் புதுப்பித்துக் குதுகலிக்கின்றனர்.

பதினைந்தாம் நூற்றாண்டில் கிறிஸ்து பிறப்புப் பற்றிய நாடகங்களும், கிறிஸ்மஸ் பாடலகளும எழுந்தன. அருட்தந்தை கிறிஸ்மஸ் என்பவர் இவ்விழா மேலும் வளர வழிவகுத்தார்.

16ஆம் நூற்றாண்டில் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த மார்ட்டின் லூதர் என்பவர் கிறிஸ்து பிறப்புவிழா மரம் என்ற ஒன்றை உலகுக்கு முதன் முதலாக அறிமுகம்செய்தார்.

### இலங்கையில் கிறிஸ்மஸ்

போர்த்துக்கேயரின் வருகையுடன் இலங்கையில் ஐரோப்

**"உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமையும் பு,மியில் சமாதானமும் நல் மனதுள்ளோருக்கு அமைதியும் உண்டாவதாக!"**

## கிறிஸ்மஸ் தாத்தா

நத்தார் வந்தாலே போதும் குழந்தைகள் எல்லாம் நத்தார்த் தாத்தாவின் வரவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பார்கள்.

பிய நாகரிகம், பண்பாடு மட்டுமல்ல சமய பாரம்பரியங்களும் வழிபாட்டு முறைகளும் அடியெடுத்து வைத்தன.

1505ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் முதன் முதலில்

# ஒளியாக மீட்பர் மனுவுருவானார்

சரித்திரத்தைக் கொண்டது. தாவது அரசனின் பிறப்பிடமும் பெத்தலகேமே. இத்தகைய புராதன பெருமைகளைத்தவிர இக்கிராமத்திற்கு வேறெந்தப் பெருமையும் கிடையாது.

எனினும், இந்த அமைதியான கிராமத்தில் இருந்துதான் தெய்வக ஒளி, இருள் படர்ந்த உலகின் மது பரவியது.

ஆதியில் தேவனோடு இருந்த வார்த்தை மாமிச உருவெடுத்து மேரி அன்னையின் கர்ப்பத்தில் இருந்து சிசுவாகப் பரமன் தன்னை மனுக்குலத்துக்கு அர்ப்பணித்தார். பெத்தலகேமின் அதிசயம இதுதான். கிறிஸ்மஸ் ஒளியின திருநாள் இயேசுவின் பிறப்பை ஒளியின் பிறப்பாகத் திருவிவிலியம் சித்தரிக்கின்றது.

இறைவனின் எல்லையற்ற அன்பைத்தான் நாம் கிறிஸ்மஸ் பண்டிகையாகக் கருதவேண்

### நோயல்

டும். இயேசுக் கிறிஸ்துவின் மனித அவதாரம் என்றோ நிகழ்ந்த ஒன்றாகக் கருதவேண்டாம். தினமும் நிகழ்ந்து கொண்டிருககும் ஒன்றாகக் கருதவேண்டும். அப்போதுதான் நாம் கொண்டாடும் கிறிஸ்மஸ் பண்டிகை ஆத்தமுள்ளதாக இருக்கும்.

கிறிஸ்து ஆயிரம் முறை பெத்லகேமில் பிறந்தாலும் நம் உள்ளத்தில் பிறக்கவில்லையென்றால் அதனால் எதுவித பயனுமில்லை.

1880ஆம் ஆண்டில்தான் கிறிஸ்மஸ் தாத்தாவின் வருகை வரலாற்றில் இடம்பெறறது. குழந்தைகளின் காலுறைகளில் இரவோடு இர வாக கிறிஸ் மஸ் பரிசு கள் நிரப்பப் படுவதாக நம்பிக்கை ஏற்பட்டது. குழந்தைகளின் நட்புத் தெய்வம் தான் கிறிஸ்மஸ் தாத்தா. கிறிஸ்மஸ் தாத்தாவின் நடனங்களும பேச்சுக்களும, ஆடை, தொப்பி முதலியவையும் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை மனம் விட்டுச் சிரித்து மகிழும் விதமாக அமைந்துள்ளன.



### வாழ்த்துமடல்கள்

1844ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பின் வாழ்த்து மடல்களை மககள் உலகம் முழுவதும் பயன்படுத்தத் தொடங்கினர். உறவினர்கள், நண்பர்கள், சமயத் தலைவர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் எல்லோருடனும் கிறிஸ்மஸ் வாழ்த்துககள் மூலம் தங்கள் மகழ்ச்

இலங்கையில் காலடிவைத்தனர். கப்பற் தளபதி லோரன்ஸ்சோடி சல்மெய்டா தனது பெயரைக் கொண்ட புனிதரின் பெயரால் ஒரு ஆலயத்தை அமைத்தான்.

அந்தககொட்டில் கோவிலில் தான் 1505ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதி முதல் கிறிஸ்மஸ்விழா இலங்கையில் கொண்டாடப்பட்டது. 1543இல் எத்துல் கோட்டையில் கிறிஸ்மஸ் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

கிறிஸ்து பிறப்பின் உன்னத நோக்கம் கிறிஸ்மஸ் விழாவில் பிரதிபலிக்கவேண்டும். எம ஒவ்வொருவர் உள்ளத்திலும் இயேசு பிறப்பார். □

## கருணைக் கதிர் இலங்கும் சுடராய் அமலன் உதயமானார்...!

அருள் இலங்க! பொருள் இலங்க! பூம் பொழில் இலங்க
திகழருஞ் செம் பொன்னெனுந் திவ்விய கிறிஸ்தவப்
புகழ் 'இலங்க! மெய்ஞ்ஞான எழில் இலங்க!
முழுநிலாவாகத் தெய்வீகம; நீதி; நெறி இலங்க!
"உன்னைப் போல் என்னை நீ!" – "என்னைப் போல்
உன்னை நான்!" நேசிக்கும் உண்மை
அன்பிலங்க! தூய பண்பிலங்க!
தேமதுரத் தமிழ் இலங்க! செந்தமிழர் நல்வாழ்வு
சேமம்; சுகம்; செழித்திலங்க
தாமரை இதழ் வதன நிகர் மாமரி; தூசை பாலகனாய்
கருணைக்கதிர் இலங்கும் பகலவனாய்!
சுகிர்த இறை ஒளியாக இந்த அவனியிலே
உதித்து எழுந்தார்! உதய மானார்!

தே.ச.வில்சன், யாழ்ப்பாணம்.

## ஒளி பிறந்தது!

பாலன் பிறந்தனன்
பாவம் தறித்தனன்
சீலம் படைத்தனன்
சீர்மை அளித்தனன்!

ஒளி பிறந்தது
உலகொளிர்ந்தது
விழி திறந்தது
மழை பொழிந்தது

அன்பு மிளிர்ந்தது
துன்பு தொலைந்தது
இன்பு கொழித்தது
இன்மை இடிந்தது!

மறை மலர்ந்தது
கறை கலைந்தது
குறை குலைந்தது
நிறை வொளிர்ந்தது

தென்நல்லை கு.பகீரதன்

## யேசு பாலன் உதித்தனன்

"பாலன் பிறந்த நாளிதுவாம்
தேவமைந்தன் பிறந்த நாளிதுவாம்
அன்னை மரியாள் மடியினிலே
தவழ்ந்தனன் யேசு பாலனவன்
விண்ணவர் கூடி வாழ்த்திடவே
வையகம் முழுவதும் வியந்திடவே
ஒளிக்கீற்றும் வானில் தென்படவே
மந்தைகள் சூழ்ந்த தொழுவத்திலே
உதித்தனன் யேசு பாலன் இன்று"

இ.வி.இரத்தினம்

# உலக அரங்கில் தமிழருக்கென ஒரு முகவரியை தேடித் தந்தவர் தேசிய தலைவர் பிரபாகரனே

## கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை தெரிவிப்பு

(மருதங்கேணி)



**உலக அரங்கில் தமிழருக்கு முகவரியைத் தேடித்தந்த தலைவன் காலத்திலேயே சுதந்திரத் தமிழீழத்தை அடைந்து நாளைய சந்ததி சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழ வழிசமைப்போம் எனக் கடந்த திங்கட்கிழமை பொலிகண்டி ஆலடியில் இடம்பெற்ற நாட்டுப்பற்றாளன் சிவலிங்கம் விஸ்ணுமூர்த்தியின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.**

குடும்பம், பிள்ளைகள் என்ற வட்டத்திறகுள் வாழ்ந்து விடாது யாழ்.குடாநாடு இந்திய இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட வேளை புலிகள் கொரில்லாக்களாக அலைந்துகொண்டிருந்த போது சுற்றிவளைப்புகளிலிருந்து தப்பவும் எமது விடுதலை போராட்டத்தை முன்னெடுப்பதற்குக் கையாண்ட வழிமுறை, குடுமபங்களோடு சில ஒளி விடங்களை அமைத்துத் தங்கியிருந்து செயற்படடோம்.

அந்தவேளை, இந்திய இராணுவத்தின முழுக்கவனமும் வலவெட்டித்துறை, பொலிகண்டி பகுதிகளை நோக்கியதாகவே இருந்தது. அப்போது வதிரியில் இருந்த நாட்டுப் பற்றாளன் விஸ்ணுமூர்த்தி தனது வீடடில் எங்களுக்கு ஒளிவிடங்களை அமைத்துத் தந்தது மட்டுமல்லாமல் பல வருடங்களாகப் போராளியாக இருந்து இயக்கத்தற்கு மிகப் பெரிய சேவைகளைச் செய்துள்ளார்.

இவரை 1986 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20ஆம் திகதி இவ் வீதியிலே இந்திய இராணுவத்தினர் சுட்டுக்கொன்றார்கள்.

இவ்வாறான நாட்டுப்பற்றாளகளாலும் மக்களின் அர்பபணிப்பாலுமதான் நாம் இன்று வளர்ச்சி அடைந்துள்ளோம். நாம் நடந்துவந்த பாதை எம்மை வளர்ச்சியடைய அரும்பணியாற்றியூ மக்களையும் நாம் மறந்துவிடமாட்டோம்.

இவ்வாறான நாட்டுப் பற்றாளர்கள் தமது இனம் விடுதலை பெறவேண்டும் என்ற இலட்சியத்திறகாக உழைத்தவர்கள். நிச்சயம் அவர்கள் இலட்சியம் நிறைவேறும். நாட்டுப் பற்றாளர்கள் மதிக்கப்படவேண்டியவர்கள் மறக்கமுடியாதவர்கள். எமது போராட்டத்தின் மூலம்தான் எமது இனம் விடுதலை பெறமுடியும் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியும்.

எமது தேசத்தில் எத்தனையோ இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள். எவ்வளவோ சொத்திழப்புக்கள் ஏற்பட்டன. இவையெல்லாம் எதற்காக ஏற்பட்டன, எமது போராட்டம் மீண்டும் மீண்டும் கூர்மையடைந்து இறுதி இலக்கை அடையவேண்டும என்பதற்காகவே.

சாதி மத பேதமின்றி எலலாவற்றையும் துறந்து விடுதலையே எங்கள் உயிர்மூச்சாக இருக்கவேண்டும் இல்லையெனில் நாட்டுப் பற்றாளர்கள், மக்கள், மாவீரர்களின் தியாகங்கள் அர்ததமற்றதாகிப்போய்விடும்.

இளைஞர்கள், யுவதிகள் சகலரும் தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவதற்காக உழைக்கவேண்டும்.

இந்த யுத்தநிறுத்தம் ஏற்படுவதற்கு முதல் போர் நடந்த காலப் பகுதியிலிருந்து இன்றுவரை மறைமுகமாகவும், இரகசியமாகவும் இந்தியா, எமக்கு எதிராகப் போர்களில் ஈடுபடுவதற்கு இலங்கை கடற்படைக்கு உதவிபுரிந்து வருகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னான சமாதான காலத்தில் கொழும்பில் இலங்கை கடற்படையுடன் நேரடியாகக் கூட்டுப் பயிற்சி மேற்கொள்கிறது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் அண்டை நாட்டின் தகவல்களைப் பெற்றுத்தான் இலஙகை கடற்படை எமது இரு கப்பல்களைத் தாக்கியழித்தது. இதில 20 போராளிகள் கொல்லப்பட்டனர். நாம் எத்தனையோ இழப்புக்களைச் சந்தித்தும் பொறுமையாக இருந்து வருகிறோம்.

இன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஊடான சமாதான காலத்தில் இலங்கையின் கடற்படையை வலுப்படுத்தவும் பலப்படுத்தவும் பலர் போட்டி போட்டு உதவி செய்கிறார்கள்.

சென்ற வாரமளவில் இலங்கை கடற்படைத் தளபதி தயாசந்தகிர இரகசிய விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்தார். விஜயத்தின் நோக்கம், மாதகலில் சங்கமித்தை என்ற விகாரைக்கு அடிக்கல் நாட்டுவது.

எனவே இலங்கை இராணுவததால் ஆக்கிரமிக்கப்பட்ட யாழ். குடாநாடு எவ்வளவோ மாற்றம் பெற்று வருகிறது. உங்கள் ஊர்களிலுள்ள அரசமரங்களுக்குக் கீழ் எல்லாம் புத்தர்சிலைகள வைக்கப்படப்போகிறது.

எனவே கடந்தகால பகுதியில் யாழ்.குடாநாடு திட்டமிட்டு அரசாலும், அரசபடைகளாலும் சிதைக்கப்பட்டுவருகிறது. எமது விடுதலைப் போராட்டம் 1983ஆம் ஆண்டு கூர்மையடைய முன்பு வடக்கு - கிழக்கு - தெற்கு என சிங்களவர்கள் நாயாற்றிலும், முல்லைத்தீவிலும் சாலையிலும், வடமராட்சி கிழக்கு மருதங்கேணி, தாளையடியிலும் கடற்கரைக் கிராமங்களில் குடியிருந்து படிப்படியாக ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள். விடுதலைப் போராட்டம் கூர்மையடைந்திராவிட்டால் தாளையடி இன்று தமிழ் பெயராக இருக்காது.

இவ்வாறு புல்மோட்டை அருகில் தமிழ் கிராமமான கொக்கிளாயின் பெயர் அழிக்கப்பட்டு 'பராக்கிரமபுர' என்று மாற்றறப்படடுள்ளது.

வடக்கு - கிழக்கில் வீடுகளை அகற்றி, இராணுவமுகாம், சந்திக்குச் சந்தி இராணுவ காவலரணகள். மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாது. ஆனால் தெறகில் எங்கோ ஒரு மூலையில இயல்பான எந்த நடவடிக்கைக்கும் பங்கம் இல்லாது இராணுவ முகாம்கள் உள்ளன. ஏன் இந்தநிலை எமக்கு.

யாழ்.குடாநாட்டில் கடந்த 9 வருடகாலப்பகுதியில் கலாசார சீரழிவு பெருகிக்கொண்டிருக்கினறன. இது இலங்கை அரச படைகளின் சதிவேலையாகும். இவற்றிலிருந்து விடுபட்டு இளஞ்சமுதாயம் விடுதலைப் பாதையில் செல்ல யாழ்.குடா நாடு மீட்கப்பட்டால்தான் பொருளாதார கலாசாரத்தில் நாம் முன்னேற்றத்தைக காண முடியும்.

இதேவேளை, இந்நிகழ்வில் கடற்புலிகளின் தளபதி சூசை நேரடியாகப் பங்கு கொள்ளாதிருந்தபோதும் அவரது உரையின் ஒலிப்பதிவுநாடா நிகழ்வில் ஒலிபரப்பப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ப-35)

# ஆய்வுகூடப் பரிசோதகர்களின் கடமை ஜனவரி முதல் சுழற்சி முறையில்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் சில பிரதான வைத்தியசாலைகளில் பணிபுரியும் வைத்திய ஆய்வுகூடப பரிசோதகர்களின் கடமை நேரத்தைச் சூழற்சி முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படவுள்ளது. அத்துடன் இதற்கு அரசாங்கம் அதிகளவு செலவுகளை மேற்கொண்டு வருகின்றது. இச்செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

தனியார் வைத்தியசாலைகளில் செலவினை மேற்கொள்வதன் மூலம செலவினை மேலும் கட்டுப்படுத்தமுடியுமென்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதுதொடர்பாக வ!சேட பேச்சுவார்த்தையொன்று சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தலைமையில் நடைபெற்றது இந்தப் பேச்சுவார்த்தையில வைத்திய ஆய்வுகூட உத்தியோகத்தர்களும் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

தங்களது கடமை நேரததை விட மேலதிகமாகக் கடமைபுரியும் ஒரு மணித்தியாலத்துக்கும் இரண்டு மணிநேர கொடுப்பனவை வழங்குமாறு தொழிற்சங்கப் பரதிநிதிகள் அமைச்சிடம் கேடடுள்ள தாக அமைச்சர் நிமால சிறிபாலடி சில்வா மேலும் தெரிவித்தார். (ந-8)

# இந்தியாவில்ருந்து தாயகம் திரும்பியோருக்கான உதவிவழங்கல்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் அகதிமுகாம்களில் வசித்து மீள நாடு திரும்பிக்கொண்டிருக்கும் மக்களுககு புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச நிறுவனம் (IOM) பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

அந்தவகையில், தற்போது 2004ஆம் ஆண்டு மீளத திருமபியவாகளுககுத் தமது உதவிகளை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. 2004ஆம் ஆண்டில் நாடு திரும்பி இதுவரை பதிவு செய்யாதவர்கள 2005ஆம் ஆண்டு ஜனவா! மாதம் 5ஆம் திகதிக்கு முனபு தஙகள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு புலம்பெயாநதவர்களுககான சாவதேச நிறுவனததினா (IOM) கேட்டுள்ளனர்.

யு.என்.எச.சி.ஆர் நிறுவனத்தின் உதவியுடன் விமான மூலம் தாயகம மீளத் திரும்பியவர்களும, படகுகள் மூலம் மீளத்திருமபியவர்களும் தங்கள் பகுதி கிராம சேவகர் மற்றும் பிரதேசசெயலர் உறுதிப்படுத்திய கடிதத்துடனும் இந்தியாவிலிருந்து மீளத்திரும்பிய திகதியை உறுதிப்படுத்துவதறகான ஆவணஙகளுடனும், 38, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைநதுளள IOM அலுவலகத்தில் தங்கள் பதிவுகளை மேற கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனம் இவர்களுக்கான தொழில்சார் உபகரணங்களை வழங்குவதுடன் தொடர்ந்து வரும் 6 மாதங்களுக்கு உதவிப்பணமாக ஆயிரத்து 400 ரூபாவையும் வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 21, 22ஆம் திகதிகளில் யாழ்.மாவட்டத்தின் 12 பிரதேச பிரிவுகளைச் சார்ந்த 54 பயனாளிகளுக்கு தொழில்சார் உபகரணஙகள் வழஙகப்பட்டன.

பிரதேச செயலகப் பிரிவு ரீதியாக யாழ்ப்பாணம்-29, நெடுந்தீவு- 03, சங்கானை - 01, சண்டிலிபபாய் - 03, உடுவில் - 03, தெல்லிப்பழை - 02, பருத்தித்துறை - 03, கரவெட்டி - 04, சாவகச்சேரி - 01, வேலணை - 02, ஊர்காவற்றுறை - 01, காரைநகர் - 02 பயனாளிகளுக்கு இவ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (ந)

# சமாதானத்தை வலியுறுத்தி கிளி.யில் மாபெரும் பேரணிகள்

## 4 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெறும்

(கிளிநொச்சி)

தேக்கநிலையிலுள்ள சமாதான முன்னெடுப்புக்களை விரைவில் மீள ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தும் வகையில் கிளிநொச்சியில் மாபெரும் பேரணிகள் நடாத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 28,29,30,31 ஆம் திகதிகளில் இப பேரணிகள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 28 ஆம திகதி பளையிலும், 29 ஆம் திகதி கண்டாவளையிலும், 30 ஆம் திகதி பூநகரியிலும் இப் பேரணிகள் நடைபெறவுள்ளதுடன் 31ஆம திகதி கிளிநொச்சியுல் மாபெரும் பேரணி நடைறெவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுளளது.

இப் பேரணிகளின் முடிவில் ஜனாதிபதி,சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன. (ந-8)

# நிதி ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

நுணாவில் கிழக்கு சர்வ சாதன சனசமூக. நிலையத்திற்கு முன்பள்ளிக்கான கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு 60 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுளளது. (ப-29,9)

## அத்துமீறல்கள் குறித்து ஆராய

# யாழ்ப்பாண மீனவர்கள் இந்தியா செல்வார்கள்

(மருதங்கேணி)

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடிப்பது சம்மந்தமாக இந்தியாவிலுள்ள மீனவ சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு யாழ்.மாட்டக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று ஜனவரி மாதம் முதல் வாரத்தில் இந்தியா செல்லவுள்ளது.

இந்திய மீனவர்களின் ஊடுருவலால் இலஙகை - இந்திய மீனவாகளிடையே ஏற்படக்கூடிய பிளவுகள், அரசியல் அபாயஙகள் குறித்து இக்குழு இந்திய மீனவர்களுக்கு விளக்கமளிக்கும் எனத தெரிவிக்கப்படுகிறது. (ப-35)

# விசனம்

(பொலிகண்டி)

பொலிகண்டி கந்தவனக் கடவை முருகன் ஆலயத்தின் பின்புறத்தில் அமைந்துள்ள அன்னதான மண்டபத்தினுள் கடடாக் காலி ஆடு மாடுகள் சென்று அப் பகுதியினை அசிங்கப்படுத்திவருவதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-106)

# சத்துணவு வழங்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான சத்துணவுமா இன்று வழஙகபபடவிருக்கின்றது.

இதில் கடந்தவாரம் பெற்றுககொளளாத மாணவர்கள இனறைய தினம் பெறறுககொள்ளும்படி பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (ப-29,9)

# கொடிகாமத்தில் நடைபெற்ற மனிதச் சங்கிலிப் போராட்டம்











# அன்னையர் முன்னணியின் போராட்டம்

1996, 97ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல்போனோர் குறித்து இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாததைக் கண்டித்து சட்ட உதவி மன்றத்திற்கு முன்னால் நேற்றையதினம் யாழ். மாவட்ட அன்னையர் முன்னணியினர் போராட்டத்தில் ஈடுபட்ட போது......







படங்கள்: சிவசங்கர், ஐங்கரன்

# அமைச்சர் டக்ளஸின் நத்தார் வாழ்த்துச் செய்தி



(யாழ்ப்பாணம்)

துன்பத்தில் ஆழ்ந்திருந்த மக்களை அதிலிருந்து விடுவித்து நல்வழிகாட்ட இயேசுபிரான் மண்ணுலகில் மனிதராய் அவதரிதத நந்நாளையே இன்று கிறிஸ்தவ மக்கள் நத்தார் பண்டிகையாகக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

அதேபோல் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களின் மனங்களிலும் என்றென்றும தீமை இருள் மறைந்து ஒளிமயமான எதிர்காலம் ஒன்று உதயமாக வேண்டும் என்பதே எமது அவாவாகும் என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான கே.என்.டக்ளஸ தேவானந்தா விடுத்துள்ள நத்தார் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது வாழ்த்துச் செய்தியில்,

வடக்கு - கிழக்கு மக்கள் இன்று எதிர்நோக்கிவரும் எல்லையற்ற துன்பங்களில் இருநது மீண்டு, சுபீட்சமும், வளமான எதிர்காலமும் கிடைக்கச் சம்பந்தப்பட்ட அனைவரும் அயராது பாடுபடவேண்டும்.

நத்தார் பண்டிகையைக் கொண்டாடும் அனைத்துக் கிறிஸதவ மக்களுக்கும் எமது மனங்கனிந்த வாழத்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# மணிவாசகர் விழா

(யாழ்ப்பாணம்)

மணிவாசகரின் 50ஆவது ஆண்டு விழா இன்றும், நாளையும் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபததில் நடைபெறவுள்ளன.

இன்று சனிக்கிழமை மாலை 6.00மணிக்கு நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அகுமாரவேல் 'தாயிற் சிறந்த தயவான தத்துவனே' என்ற விடயம் பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 8.00மணிக்கு காரைநகர் மணிவாசகர் சபைத் தலைவர் சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், ஊர்காவற்றுறை பிரதேசசபை பிரதம லிகிதர் க.பாலசுப்பிரமணியம் 'என் அகமகிழத் தேரார்ந்த வீதி' எனும விடயம் பற்றியும், யாழ். பல்கலைக்கழக இறுதியாண்டு தமிழ்த்துறை மாணவன் குமரேசன் பாலஷண்முகன் 'சொல்லிய பாட்டின் பொருள்' எனும் விடயம் பற்றியும், காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் த.சிவகுமாரன் 'ஐயமும் தெளிவும்' என்ற விடயம் பற்றியும் சொற்பொழிவாற்றவுள்ளனர். (ற-246,9)

## ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒளி விழா எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை பி.ப 3.00மணிகவு பலநோக்குக் கூட்டுறவுச சஙகக் கேட்போர் கூடத்தில் நடைபெற வுள்ளது. (ற)

# யாழ்-வந்த நெதர்லாந்துப் பிரதிநிதிகள் சுற்றாடல் நிலைமைகள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான சுற்றாடல் திட்டங்களுக்கான நிதி வழங்கும் நெதர்லாந்து மத்திய சுற்றாடல் அதிகார சபையின் இணைப்பாளர் ஜோன் பென்றிங், இலங்கை மத்திய சுற்றாடல அதிகார சபையின் ஆலோசகர் அஜித் தாடி கொஸ்தா ஆகியோர் கடந்த 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தனர்.

யாழ். குடாநாட்டின் சுற்றாடல் நிலைமைகள் குறத்து அறிந்து கொள்வதற்காக இங்கு வருகைதந்த இவ் இருவரும் இருநாட்கள இங்கு தங்கியிருந்தனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ். பிராந்திய அலுவலகம், யாழ். மாவட்டதில் இந்த வருடம் முனனெடுக்கப்பட்ட சுற்றாடல் சம்பந்தமான வேலைத் திட்டங்களைப் பார்வையிட்டு இலங்கை வெளிக்கள நிலையம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைப்பது தொடர்பாக ஆராய்வதற்கும், வடக்கு-கிழக்கில் கரையோர சமூக அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான சாத்தியக்கூறு பற்றி ஆராய்வதற்காகவுமே இவாகள் யாழ். குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா, யாழ். பல்கலைககழக துணைவேந்தர் பேராசியா மோகனதாஸ, யாழ்.மாவட்ட நயாப திட்டப்பணிப்பாளர், யாழ். மாவட்ட நொறாட்திட்டப் பணிப்பாளா, ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் சிரேஸ்ட திட்ட அலுவலா் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தினார்கள். (ற-19)

## புதுவருட சேவை

புங்குடுதீவு சமுர்த்தி வங்கி புதுவருடப் பிறப்பு தினத்தை ஒட்டி அடுத்தமாதம் முதலாம் திகதி காலை 9.00மணி தொடக்கம் நண்பகல் 12மணி வரைக்கும் மக்கள் சேவைக்காக திறக்கப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் வாடிக்கையாளர்கள் தமது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளலாம் என சமுர்ததி முகாமையாளர் அறிவித்துள்ளார். (ப-126)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞான சம்பந்தர் ஆதனத்தில் நாளை ஞாயிற்றுககிழமை காலை 8.00மணி முதல் திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. (ற)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நீர்வைமணியின் 'மெய்கண்ட தேவர் வரலாறு' தொகுப்பு நூல் கடந்த மாதம் வெளிவந்துள்ளது. (க)

# ஈராக்கின் பாதுகாப்பை உள்நாட்டு இராணுவத்திடம் ஒப்படைப்பது கடினம்

## அமெரிக்க அதிபர் புஷ் கருத்து



(வோஷிங்டன்)

ஈராக்கின் பாதுகாப்பை அந்நாட்டுப் பொலிசார் மற்றும் இராணுவத்தினரிடம் ஒப்படைப்பது கடினமான காரியம் என அமெரிக்க அதிபர் புஷ் கூறியுள்ளார்.

2004ஆம் ஆண்டு நிறைவடைய உள்ளதையொட்டி வெள்ளைமாளிகையில் அதிபர் புஷ் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

ஈராக் போர் விவகாரத்தை அமெரிக்க இராணுவ அமைச்சர் ரம்ஸ்பீல்டு மிகவும் திறமையாகக் கையாண்டார். போரில் இறந்த அமெரிக்க வீரர்களின் குடும்பத்தினருக்கு அவர் அனுதாபக் கடிதம்கூட அனுப்பவில்லை என்று புகார் கூறப்படுகிறது. உண்மையில் அவர் வெளித்தோற்றத்திற்கு சற்றுக் கடினமானவராக இருந்தாலும் மிகுந்த நாகரிகம் உள்ளவர். ஈராக்கியர்களின் விருப்பங்களைச் சீர்குலைக்கும் முயற்சியாகவே அங்கு தீவிரவாதிகள் கார்க்குண்டுத் தாக்குதலை நடத்தி வருகின்றனர். தாக்குதல்களை ஒரு பிரசார கருவியாக அவர்கள பயன்படுத்தி வருகின்றனர்.

சதாம் ஹுசேன் ஆட்சியில் இருந்ததை விட ஈராக்கில் தற்போது மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட்டுள்ளது. ஈராக்கியப் பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் பயிற்சி அளிப்பது குறித்து மாறுபட்ட கருத்துக்கள் இருப்பது உண்மையே. ஈராக் பொலிசார் மற்றும் இராணுவத்தினருக்கு உரிய பயிற்சியை அளித்து அந்நாட்டுப் பாதுகாப்பை அவர்களிடமே அமெரிக்க இராணுவத்தினர் ஒப்படைப்பது என்பது கடினமான காரியம்.

கொள்கை விஷயங்களில் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் ரஷ்யாவுடனான நட்புறவு மிகுந்த வலுவாகவே உள்ளது. அந்நாட்டு அதிபர் விளாடிமீர் புடினுடன் எனக்குத் தனிப்பட்ட முறையில் மிகுந்த நட்புறவு உள்ளது. இந்த நட்புறவு தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். அவரை வரும் பெப்ரவரி மாதம் சந்தித்துப்பேசவுள்ளேன்.

அடுத்த ஆண்டு தொடக்கம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் பட்ஜெட், அமெரிக்காவின் உள்நாட்டு நிதி நிலவரத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்தோடு சற்று கடினமானதாகவே இருக்கும். இவ்வாறு புஷ் கூறினார். (ப)



அமெரிக்காவில் குளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட பூனையுடன் அதன் எஜமானி ஜுலி உள்ளார். இந்தப் பூனை, ஜுலி ஆசையாக வளர்த்து இறந்த நிக்கி என்ற பெயருடைய பூனையின் மரபணுவில் உருவாக்கப்பட்டதாம்.

# கள்ளச் சாராயம் குடித்த 13பேர் பரிதாப மரணம்

(மும்பை)

மும்பையில் கள்ளச்சாராயம் குடித்த 13பேர் இறந்தனர். மும்மையின் தெற்குப் பகுதியில் உள்ள என். எம். ஜோஷி மார்க் எனும் குடிசைப் பகுதியில் நேற்று முன்தினம் கள்ளச் சாராயம் சப்ளை செய்யப்பட்டுள்ளது.

அப்போது சிலருக்கு தலைச்சுற்றல், வாந்தி, மயக்கம் ஏற்பட்டது. உடனே அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் 15 பேர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

மருத்துவமனைக்குச் செல்வதற்கு முன்பே நான்கு பேர் இறந்தனர். சிகிச்சை பெற்று வந்தவர்களில் ஒன்பது பேர் அடுத்தடுத்து இறந்தனர். மீதமுள்ளவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கள்ளச்சாராயம் சப்ளை செய்ததாக ஒருவரை பொலிசார் கைதுசெய்துள்ளனர். பொறுப்பில்லாமல் செயல்பட்டதாக என். ஜோஷிமார்க் பொலிஸ் ஸ்டேசனைச் சேர்ந்த முத்த பொலிஸ் இன்ஸ்பெக்டரை மகாராஷ்டிரா அரசு சஸ்பெண்ட் செய்துள்ளது.

இதுகுறித்து மேலும் விசாரணை நடந்து வருகிறது. (ப)



இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் பலஸ்தீன ஜிகாத் தலைவர் முகமது அபு நாசர் கொல்லப்பட்டார். அவரது இறுதிச் சடங்கின்போது அவரது ஆதரவாளர்கள் இஸ்ரேல் நாட்டிற்கு எதிராகக் கோஷங்கள் எழுப்பினார்கள்.

## தாக்குதல்!

சட்டிஸ்கர் மாநிலத்தின் தெற்கு பாஸ்டர் பகுதியில் இருக்கும் பஜ்பூர் - காங்லூர் சாலையில் நக்ஷலைட்டுகள் கண்ணிவெடியைப் புதைத்து வைத்து வெடிக்கச் செய்தனர்.

அந்த சாலையில் மூன்று இடங்களில கண்ணிவெடித் தாக்குதலை 200க்கும் அதிகமான நக்ஷலைட்டுகள நடத்தினர். பின்னர் பொலிஸார் விரைந்து சென்று தாக்குதல் நடத்தினர். சுமார் இரண்டு மணிநேர சண்டைக்குப்பின் நக்ஷலைட்டுகள் தப்பி ஓடினர். அந்த இடத்தில் இருந்து ஏராளமான வெடி பொருட்களை பொலிஸார் கைப்பற்றினர். (ப)

## வெடி விபத்தில் 8பேர் பலி

(பெய்ஜிங்)

சீனாவில் ஹுனான் மாகாணத்தில், லிலிங் நகரில் விவசாயி லீ என்பவரது வீட்டில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வெடிவிபத்தில் 8பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

இவ்விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. பொலிசார் விசாரிக்கின்றனர். (ப)



சீனா சென்றுள்ள வெனிசுலா நாட்டு ஜனாதிபதி ஹுகோ சவெஸ்சுக்கு பீஜிங்கில் இராணுவ அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

# நேபாளத்தின் பல இடங்களிலும் சண்டை 22 தீவிரவாதிகள் உட்பட 34பேர் பலி

(காத்மண்டு)

நேபாளத்தில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது மாவோயிஸ்ட் கொரில்லாப் படையினர் அதிரடித் தாக்குதல் நடத்தினர். வெவ்வேறு இடங்களில் நடந்த இச்சண்டையில் மொத்தம் 34பேர் இறந்தனர்.

நேபாளம் காத்மண்டு அருகே உள்ள மதுராதனந்தா கிராமத்தில் ரோந்து சுற்றிவந்த இராணுவத்தினர் மீது மாவோயிஸ்ட் கொரில்லாப் படையினர் திடீரென துப்பாக்கியால் சுட்டுத் தாக்குதல் நடத்தினர். இதில் இராணுவ வீரர்கள் இரண்டு பேர் இறந்தனர்.

இந்தச் சண்டை குறித்து, அருகிலிருந்த இராணுவ முகாமுக்குத் தெரியவந்தது. உடனே ஹெலிகொப்டர் மூலம் இராணுவப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். அப்போது கொரில்லாப் படையைச் சேர்ந்த 22பேரின் இறந்த உடல்கள் அங்கு கிடந்தன.

அதேபோல, சிசபானி நகரில் நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. அதில் இராணுவ வீரர்கள் ஐந்துபேர் இறந்தனர். மேலும் எல்லையருகே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 13 வயது சிறுவன் உட்பட 5பேர் கொல்லப்பட்டனர். துப்பாக்கிச் சண்டை நடப்பது குறித்து அறிந்ததும், சம்பவ இடத்திற்கு இராணுவப் படையினர் செல்வதற்குள் கொரில்லாப் படையினர் காட்டுக்குள் ஓடி ஒளிந்துகொண்டனர்.



அமெரிக்காவில் நவீன பரசூட் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். விமானம் கோளாறு ஏற்பட்டு தரையை நோக்கிப் பாய்கின்ற நேரத்தில் இந்த பரசூட் செயல்பட்டு விரியும். நேற்று முன்தினம் ஒரு சிறிய விமானத்தில் இந்த பரசூட் செயல்முறை விளக்கம் நடந்தது.

# நரசிம்மராவின் உடல் அரசமரியாதையுடன் ஐதராபாத்தில் இன்று தகனம் செய்யப்படும்





முன்னாள பிரதமரும் காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவருமான நரசிம்மராவ் இருதய கோளாறு, நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு டெல்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ விஞ்ஞான கழக ஆஸ்பத்திரியில் கடந்த 10ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி நேற்று முன்தினம் பிற்பகல் மரணம் அடைந்தார். அவருக்கு வயது 83.

மரணம் அடைந்த நரசிம்மராவின் உடல் ஆஸ்பத்திரியில் இருந்து டெல்லி மோதிலால் நேரு பார்க் பகுதியில் உள்ள அவரது வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. அங்கு அவரது உடலுக்கு ஏராளமான பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

நரசிம்மராவ் 1921ஆம் ஆண்டு ஜ"ன் மாதம் 26ஆம் திகதி ஆந்திர மாநிலம் கரீம் நகரில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தார்.

கல்லூரியில் படிக்கும் போதே சதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டாா.

1957ஆம் ஆண்டு ஆந்திராவில் மதானி சட்டசபைத் தொகுதியில் காங்கிரஸ் சார்பல் போடடியிட்டு எம்.எல்.ஏ ஆனார். சஞ்சீவரெட்டி மந்திரிசபையில் சட்டம் மற்றும் செய்தித்துறை மந்திரியாகப் பணியாற்றியுள்ளார்.




இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி ஆட்சிக் காலத்தில் மத்திய மந்திரியாகவும் பணியாற்றி இருக்கிறார். பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

1991இல் ராஜீவ்காந்தி இறந்த பிறகு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் அதிக இடங்களைப் பிடித்த கட்சி என்ற அடிப்படையில் நரசிம்மராவ் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி அமைத்தது. 5 ஆண்டுகள் இந்த சிறுபான்மை அரசு நீடித்தது.

தென்மாநிலத்தில் இருந்து பிரதமரான முதல் தலைவர் நரசிம்மராவ்தான். அரசியல் சாணக்கியர் என்று வர்ணிககப்பட்ட நரசிம்மராவ் பொருளாதார மேதையாகத் திகழ்ந்தார். சிக்கலான நேரத்தில் இவரது நிர்வாக, பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் இந்தியப் பொருளாதார பின்னடைவுக்குத் தள்ளப்படாமல் காப்பாற்றப் பெரிதும் உதவியது.

ஜனாதிபதி அப்துல்கலாம், பிரதமர் மன்மோகன் சிங், துணை ஜனாதிபதி செகாவத், முன்னாள் பிரதமர் வாஜ்பாய், காங்கிரஸ தலைவ' சோனியா உட்பட பல்வேறு தலைவர்கள் நரசிம்மராவின் வீட்டுக்குச் சென்று அவரது உடலுக்கு மலர்வளையம் வைத்து இறுதி அஞ்சல' செலுத்தினார்கள்.

பிறகு நரசிம்மராவின் உடல் டெல்லி அக்பர் சாலையிலுள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகத்துககுக கொண்டு செல்லப்பட்டது. அங்கு பொதுமக்கள் அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.

நரசிம்மராவின் மறைவையொட்டி மத்திய மந்திரிசபை கூடி இரங்கல் தெரிவித்தது. 7நாள் துக்கம் கடைப்பிடிக்கவும் மத்திய அரச முடிவுசெய்துள்ளது.

பாராளுமன்றத்திலும் நரசிம்மராவ் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து உறுப்பினர்கள் 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.

நரசிம்மராவின் உடல் நேற்று மாலை 3.30மணிக்கு தனி விமானத்தில் டெல்லியில் இருந்து ஐதராபாத்துக்கு கொண்டுசெல்லப்பட்டது. அங்கு பொதுமக்கள் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அவரது உடல் இன்று மாலை 3.30 மணிக்கு ஐதராபாத்தில் அரச மரியாதையுடன் தகனம் செய்யப்படவுள்ளது.

ஐதராபாத்தில் உள்ள உசேன் நகர் ஏரிக்கரையில் உடல் தகனம் செய்ய அவரது உறவினர்கள் முடிவு செய்துள்ளனர். இறுதிச் சடங்கு நடத்தும் புத்த பூர்ணிமா பூங்காவில் நினைவுச் சின்னமும் அமைக்கப்படுகிறது.

இறுதிச்சடங்கு நிகழ்ச்சியில் முக்கிய தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இறுதிச் சடங்கு நடக்கும் பூங்காப் பகுதியில் ஏற்கனவே என்.டி.







ஆர். சமாதி, சென்னாரெட்டி சமாதி உள்ளது. அந்தப் பகுதியில் இறுதிச் சடங்கு நிகழ்ச்சிகள் நடத்தக்கூடாது, சமாதிகள் கட்டக்கூடாது என்ற சர்ச்சையும் ஏற்கனவே உள்ளது.

நரசிம்மராவின் மறைவுக்கு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் உட்பட பல்வேறு உலகத் தலைவர்களும் அனுதாபம் தெரிவித்துள்ளனர். (ப)



**கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி வத்திகன் நகரில் போப் ஆண்டவர் தனது அறையில் சிறப்பு பிரார்த்தனை நடத்தினார். அங்கு அமைக்கப்பட்டுள்ள குடில் முன் அவர் அமர்ந்து கிறிஸ்தவ மக்களுக்கு ஆசி வழங்கிய காட்சி இது.**

**போபாவில் அமைதிக்கான ஒரு முயற்சியாக குழந்தைகள் கிறிஸ்துமஸ் தாத்தா போல் வேடமணிந்து புகழ் பெற்றதும், இந்தியாவிலேயே பெரியதுமான தாஜ் உல் மஸ்ஜித் முன்பு நின்று கொண்டு, வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.**



# தென்மராட்சி வலய பாடசாலைகளிடையான போட்டிகளின் முடிவுகள் வெளியாகின

(தென்மராட்சி)

**தென்மராட்சிக் கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையில் 2004ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட மெய்வன்மை, பெரு, உள்ளக, கலாசார விளையாட்டுப் போட்டி தென்மராட்சி கல்வி வலயத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.**

## மெய்வன்மை போட்டி முதன்மை வீரர்கள்

11வயது ஆண் -கி.மடோான் எல்விஸ், உசன் இராமநாதன் மகாவித்தியாலயம். 11வயது பெண்- த.துஜீவா, அல்லாரை அ.த.க.பாடசாலை. 13வயது ஆண -செ.ஜிந்துஜன், சாவகச்சேரி இந்துக்கல்லூரி. 13வயது பெண்- சி.காருண்யா, சாவகச்சேரி இந்துக்கல்லூரி. இ.கஸ்தூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி. 15 வயது ஆண்-க.கேதீஸ்வரகுமாரன், சாவகச்சேரி இந்துக்கல்லூரி. 15 வயது பெண் - மு.கஜேந்தினி, வரணி மகாவித்தியாலயம் 17 வயது ஆண்- பொ.பதுமதீபன், மந்துவில் றோ.க.த.க.பாடசாலை. 17வயது பெண் -அ.மேரிறொன் ஷியா, நாவற்குழி மகாவித்தியாலயம். 19வயது ஆண் - தி.நிசான் ராஜ், மட்டுவில் கமலாசனி விததியாலயம். கு.பிரசன்னா, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலம். 19 வயது பெண் -கி.றஞ்சிதமலர், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவத்தியாலயம். சி.நிருஜா, சாவகச்சேரி இந்துக்கல்லூரி. 21 வயது ஆண் -கி.ரஜீவ், மீசாலை விக்னேஸ்வராவித்தியாலயம். 21 வயது பெண் -வே.ஜெயந்தினி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## தாச்சிப் போட்டி

11வயது ஆண்கள் -1ஆம் இடம் - கைதடி விக்கினேஸ்வராவத்தியாலயம் 2ஆம் இடம் -கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம். 3ஆம் இடம் -விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம். 11 வயது பெண்கள் -1ஆம் இடம்- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம். 2ஆம் இடம்- மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை. 3ஆம் இடம் -சாவகச்சோி மகளிர் கல்லூரி.

## வலைப்பந்தாட்டம்

15வயது பெண்கள் -1ஆம் இடம்- வரணி மகாவித்தியாலயம். 2ஆம் இடம் -கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம். 3 ஆம் இடம் -கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம். 17 வயது பெண்கள்- 1ஆம் இடம்- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம். 2ஆம் இடம்- கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம். 3ஆம் இடம் - வரணி மகாவித்தியாலயும். 19 வயது பெண்கள்- 1ஆம் இடம் -வரணி மகாவித்தியாலயம். 2 ஆம் இடம் -சாவகச்சேரி இந்துக் கல்லூரி. 3ஆம் இடம் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.

## உடற்பயிற்சிப் போட்டி

19வயது ஆண்கள்- 1ஆம் இடம் -சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி 2ஆம் இடம் கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம். 3ஆம் இடம் -மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம். 19வயது பெண்கள்- 1ஆம் இடம் -சாவகச்சேரி மகளிர் கல்லூரி. 2ஆம் இடம்- சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி. 3 ஆம் இடம் - மந்துவில் றோ.க.த.க. பாடசாலை.

## (மென்பந்து) கிரிக்கட் போட்டி

19வயது ஆண்கள்- 1ஆம் இடம் -சாவகச்சேரி இந்துக் கல்லூரி. 2ஆம் இடம் -சாவகசசேரி டிறிபேர்க் கல்லூரி. 3ஆம் இடம்- நாவற்குழி மகாவித்தியாலயம்.

## காற்பந்துப் போட்டி

12வயது ஆண்கள் -1ஆம் இடம் -சாவகச்சேரி இந்துக் கலலூரி. 2ஆம் இடம் -மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம். 3 ஆம் இடம் -வரணி மகாவித்தியாலயம். 14வயது ஆண்கள் -1 ஆம் இடம் -சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி. 2ஆம் இடம் -வரணி மகாவித்தியாலயம். 3ஆம் இடம -கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம் 16வயது ஆணகள் -1ஆம் இடம் -மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம். 2ஆம் இடம் -சாவகச்சேரி இந்துக் கல்லூரி. 3ஆம் இடம் -நாவறகுழி மகாவித்தியாலயம். 18 வயது ஆண்கள் -1ஆம் இடம் -சாவகச்சேரி இந்துக் கல்லூரி. 2ஆம இடம் -சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி. 3ஆம் இடம் -கச்சாய் அ.த.க.பாடசாலை.

## கரப்பந்தாட்டப் போட்டி

15வயது ஆண்கள்- 1ஆம் இடம் -கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம். 2ஆம் இடம் -சாவகச்சேரி இந்துக் கல்லூரி. 3ஆம் இடம -கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம். 17வயது ஆண்கள்- 1ஆம் இடம்- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம். 2ஆம் இடம்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி. 3ஆம் இடம் -சாவகச்சேரி டிறிபோக் கல்லூரி. 19வயது ஆண்கள்- 1ஆம் இடம் -மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம். 2ஆம் இடம்- சாவகசசேரி இந்துக் கல்லூரி. 3ஆம் இடம் - கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம். 15 வயது பெண்கள்- 1ஆம் இடம் -கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம். 2ஆம் இடம்- மீசாலை வீரசிங்கம மகாவித்தியாலயம். 3ஆம் இடம் -மந்துவில் றோ.க.த.க. பாடசாலை. 17வயது பெண்கள்- 1ஆம் இடம் -கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம். 2ஆம் இடம் -சாவகச்சேரி இந்துக்கல்லூரி. 3ஆம் இடம் -சாவகச்சேரி டிறிபோக் கல்லூரி. 19 வயது பெண்கள்- 1ஆம இடம் -வரணி மகாவித்தியாலயம். 2ஆம் இடம் -மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம். 3ஆம இடம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

## மேசைப் பந்தாட்டப் போட்டி

19வயது ஆண்கள்- 1ஆம் இடம் -சாவகச்சேரி இந்துக்கல்லூரி. 2ஆம் இடம் -மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம். 3 ஆம் இடம் -வரணி மகாவித்தியாலயம். 19 வயது பெண்கள்- 1ஆம் இடம் -சாவகச்சேரி இந்துக் கல்லூரி. 2ஆம் இடம் -சாவகச்சேரி மகளிர் கல்லூரி. 3ஆம் இடம் -மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயும்.

## சதுரங்கம்

19வயது ஆண்கள்- 1ஆம் இடம் -சாவகச்சேரி இந்துக்கல்லூரி. 2ஆம் இடம் -கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம். 3ஆம் இடம -விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம். 15 வயது ஆண்கள்- 1ஆம் இடம் -கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம். 2ஆம் இடம் -மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம். 3ஆம இடம் -வரணி மகாவித்தியாலயம். 15 வயது பெண்கள்- 1ஆம இடம் -மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், 2ஆம் இடம- விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம். 3ஆம் இடம் -வரணி மகாவித்தியாலயம், சாவகச்சோி இந்துக்கல்லூரி. 19வயது பெண்கள்- 1ஆம் இடம் -சாவகச்சேரி இந்துக்கல்லூரி. 2ஆம் இடம்- விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம். 3ஆம் இடம் -சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

## பட்மின்ரன்

19வயது ஆண்கள்- 1ஆம் இடம் -வரணி மகாவித்தியாலயம். 2ஆம் இடம் -சாவகச்சேரி இந்துக்கல்லூரி. 3ஆம் இடம்- சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி. 19 வயது பெண்கள்- 1ஆம் இடம் -வரணி மகாவித்தியாலயம், 2 ஆம் இடம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி. 3ஆம் இடம்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம். (ப-47)

## நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

பன்முகப்படுத்தபட்ட வரவு செலவுத்திட்ட நிதிமூலம் சாவகச்சேரி நகரசபைப் பகுதியில் உள்ள சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள், சிறுவர் பகல் பராமரிப்பு நிலையங்கள் என்பன திருத்தம் செய்தல், தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான கடிதங்கள் தென்மராட்சி பிரதேச செயலர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களினால் நகரசபை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ப-47)

## ஒளிவிழா

சில்லாலை கதிரைமாதா ஆலயத்தின் ஒளிவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6.00 மணிக்கு சில்லாலை றோமன் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் சில்லாலைப் பங்குத்தந்தை வணக்கத்துக்குரிய சி.அன்ரனிப்பிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இதில் மறைக் கல்வி மாணவர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு உரிய பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. (ப-58)

## புனரமைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர மிட்டாஸ் கடைச் சந்தியில் ஏற்பட்டிருந்த பாரிய குழிகள் கடந்த சனிக்கிழமை திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மிட்டாஸ் கடைச் சந்தியில் இருந்து சிவன்கோவில் வரையான காங்கேசன்துறை வீதியும் புனரமைக்கப்பட்டு வருகின்றது. நீண்டகாலமாக குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இவ் வீதி திருத்தப்படாமையினால் பொதுமக்கள் பெரிதும் போக்குவரத்திற்காக கஷரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப-47)

# வரணி மகாவித்தியாலயத்தின் குறைகளை நிவர்த்தி செய்க!

### அரச, அரச சார்பற்ற அமைப்பினரிடம் கோரிக்கை

(மருதங்கேணி)

வரணி மகாவித்தியாலயத்தில் நிலவிவரும் இடப்பற்றாக் குறை, கட்டட வசதியின்மை மற்றும் தளபாடங்கள் பற்றாக் குறை ஆகியவற்றை உடனடியாக தீர்த்துவைக்குமாறு பாடசாலை அபிவிருத்திச்சபை வேணடுகோள் விடுத்துள்ளது.

இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களில் 850 மாணவர்கள் பின்தங்கிய கிராமங்களான மசேரி, கரம்பன்குறிச்சி தாவாளை, இயற்றாளை, நாவற்காடு, குடுமியன், மந்துவில் ஆகிய கிராமங்களிலிருந்து கல்வி பயிலுகின்றனர். எனவே இம்மாணவர்களின் நலன்கருதி அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்துதர வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-35)

## வலம்புரி நங்காய் வாழி பல்லாண்டு!

ஐந்துவயதாகிவிட்ட நங்காய் வலம்புரியே!
உன்தன் ஒலி முழக்கம் இன்தமிழர் வீடில்தோறும்
சந்ததமும் பல தகவல்கொண்டுவரக் காண்கின்றோம்
எந்த இடந்தன்னில் எவை எவைதான் நிகழ்ந்தாலும்
அந்த நிகழ்வுகளை அளவறிந்து தருவதனால்
எந்தக் குறையும் இல்லாப் பசும்கொடியாய்
இந்த மண்ணில் வளர்கின்றாய் இதுகண்டு மகிழ்கின்றோம்
சந்ததமும் நின்வரவை எதிர்பார்த்து நாம் இருப்போம்
நொந்தமனம் கொண்டவரும் நோவா தருகிருப்பவரும்
வந்துவிட்டாள் வலம்புரியாள் என்று மகிழ்வெய்த
பந்தம் துணை இழந்து பதைத்து மனம் துடிப்பவரும்
தந்தம் உறவு பற்றி தகவல் நீ தருவாய் யென்று
சொந்தமகள் போலத் தூக்கிமடிமீது வைத்துதம்
வெந்த உள்ளம் சிறிதாற விருப்புடனே படிப்பார்கள்
கந்தன் நல்லை வீதிவரும் விழா பற்றி கவிபடைப்பாய் நாள்தோறும்
நந்து தவழ் சாகரம் சூழ் நயினைத் தாய் விழாவென்றால்
பந்தமுடன் பா மலர் பரப்பி அன்னைபுகழ் நீ சொல்வாய்
இந்தவகை பல சேவை நீ தொடர வேண்டும்- இனி
எந்த இடர் வந்தாலும் உன் துணையாய் நாம் இருப்போம்
சொந்த வழி நீ சென்று தொடர்ந்து பணி ஆற்றி
நந்தமிழர் நலம் பேணி இன்று போல் என்றும் வாழ
வந்தனை செய்து வாழ்த்துகின்றேன் யான், வலம்புரிமாதே.

நயினை ஆ.தியாகராசா.

### ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தால்

# பாடசாலை மாணவர்கள் 100 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் ஆறங்காவலர் சபையினரால் வருடந்தோறும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 10 பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் இவ்வாண்டு வடமராட்சியிலுள்ள அம்பன் அமெரிக்க தமிழ்மிஷன் பாடசாலை தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை, கட்டைவேலி யாக்கரு வித்தியாலயம், கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் பாடசாலை, புற்றளை மகாவித்தியாலயம், துன்னாலை தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம், துன்னாலை மேற்கு மெதடிஸ்த தமிழ கலவன் பாடசாலை, புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை, சித்திவிநாயகர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவர்க்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இவ் உபகரணங்கள் வழங்கும் இவ் நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவனேசன், பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் சி.பசுபதி, பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொணடனர். (ப-35)

### யாழ். பண்ணைப்பகுதியில்

# உள்ளூராட்சி திணைக்களத்திற்கு தனியான கட்டடம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கான புதிய கட்டடம் ஒன்று யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டு வருகிறது. வழக்கு-கிழக்கு அவசர புனர்வாழ்வுத் திட்ட நிதி மூலம் அமைக்கப்பட்டு வருகின்றது. இக்கட்டடத்தின் முதலாம் கட்ட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

நீண்ட காலமாக சொந்தக் கட்டடமில்லாததால் தனியார் கட்டடங்களில் இயங்கிவந்த இவ அலுவலகத்திறகு நியாப் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டள்ளது. (ப-47)

# நாட்டில் நிரந்தர சமாதானமும் அமைதியும் ஏற்பட ஆயர்கள் வழங்கும் ஆசியுடனான நத்தார் வாழ்த்துக்கள்

**நீதியோடு கூடிய நிரந்திர சமாதானமும், அமைதியும் விரைவில் நாட்டில் ஏற்படவேண்டுமென ஆசீர்வதித்து யாழ்.ஆயர்மேதகு தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை, மன்னார்- ஆயர் பேரருட்திரு இராயப்புயோசப்பு ஆண்டகை, தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் அதி வண. கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளார் மற்றும் திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் அதிவண. கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோர் நத்தார் வாழ்த்துச் செய்தியை வெளியிட்டுள்ளனர்.**

அவர்களின் வாழ்த்துச் செய்திகள் வருமாறு



## யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை

2004 ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாக்காலத்தில். எமது வாழ்த்துக்களையும் ஆசீரையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம். ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழா



வைக் கொண்டாடும் கிறிஸ்மஸ் காலம் நாம் எந்தமன நிலையில், எந்தக் குழப்பத்தில் இருந்தாலும் எமக்கு எப்போதும் ஒரு மகிழ்வின் காலமேதான்.

'உன்னதத்தில் கடவுளுக்கு மாடசி உரித்தாகுக. உலகில் அவருககு உகந்தோருக்கு அமைத உண்டாகுக' (லூக் 2:14) என்று வாழ்ததிய வானதூதரின் செய்தியாகும். இச் செய்தி ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார் என்ற அறிவிப்பை எப்போதும் ஞாபகம் ஊட்டிக் கொண்டே இருக்கும்.

ஆண்டவர் இயேசுவின் பிறப்பு பற்றிப் பழைய ஏற்பாட்டில் தெரிவிக்கும் 'காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடர் ஒளி உதித்துள்ளது' (எசாயா 9:2) என்னும் செய்தி இன்றும் எமது வாழ்வனுபவத்தில் ஆழ்ந்து அர்த்தம் காணப்படவேண்டிய செய்தியாகும்.

நீண்டகாலப் போரும் அதன் அனர்த்தங்களும் நிறுத்தப்பட்டு சமாதானத்திற்கும் பேச்சுக்குமான புரிந்துணர்வு ஒப்பநதம் கைச்சாத்திடப்பட்டு, கடந்த 35 மாதங்களுக்கு மேலாக எதுவுமே நகராத நிலையில் இருப்பது தமிழ் மக்கள் மனதுகளில் ஒரு பய உணர்வையே தொடர்ந்தும் இருக்கச் செய்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் 2004 ஆம் ஆண்டு மாவீரர் தின உரையில், 'இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான வாழ்வும் அமைதியுமின்றி நாம் தொடர்ந்தும் அரசியல் வெறுமைக்குள் சிறைப்பட்டுக்கிடக்க முடியாது' என்று தெரிவித்துள்ளார். அத்துடன், காலதாமதம் இன்றிப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் படி அவசரவேண்டுகோளையும் அரசுக்கு விடுத்துள்ளார்.

இவ் வேண்டுகோள் நிராகரிக்கப்படுமேயானால் மீண்டும் போர் மூளும் சூழல் உருவாவது தவிர்க்கப்படமுடியாதது போல் தெரிகின்றது. சர்வதேச உலகும் ஊடகங்களும் இத்னைத் தெளிவாகப் படித்து உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கும் வேளையில், இதன் நிமிர்ததமாக என்ன விளைவுகள் ஏற்படுமோ என்ற ஏக்க உணர்வில் தமிழ் மக்கள் குழம்பிப்போய் இருக்கின்றார்கள்.

இனியும் போரையும் அதன் கொடூர அனுபவங்களையும் மனதாலும் நினைத்துப் பார்க்க வலிமையற்றவர்களாகத் தமிழ் மக்கள் இருக்கின்ற வேளையில், மீண்டும் ஒரு போர் ஏற்படப் போகின்றது என்ற எணணம் கூட தமிழ் மக்கள் மனதுகளில் ஏற்படாதவாறு நிலைமையை விரைவாகச சரி செய்யவேண்டும என அரசிற்கும் எதர்க்கட்சிக்கும் தமிழ் மக்களின் பேரால் வேண்டுகோள்விடுக்க விரும்புகின்றோம்.

அரசியல் சுய இலாபங்களையும், யார் பெயர் பெறுவது என்ற வறட்டுக் கௌரவத்தையும் விடுத்து, இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் அமைதியான ஒரு வாழ்வு ஏற்பட வேண்டும் என்ற நோக்குடன் சம்பந்தபபட்ட அனைவரும் செயல்படும் காலம் இதுவாகும்.

போானால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட குடும்ப அமையுக்கள் பற்றிக் கடந்த ஆண்டில் நாம் சிந்தித்துப் பல திட்டங்களைத் திட்டிச் செயற்பட்டோம். குறிப்பாக இளைஞர்களின் கட்டுக்கடங்காத வாழ்வு பற்றிக் கவனம் செலுத்தினோம். அதன் விளைவாக பல மாற்றங்கள் இளைஞர்கள் வாழ்விலும் குடும்ப அமைப்பக்களிலும் ஏற்பட்டுள்ளது. நற்கருணையாண்டு திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் அவர்களால் பிரகடனப் படுத்தப்பட்ட நிலையில் ஒரு விசேட கருத்தை உங்கள் முன வைக்க விரும்புகின்றோம். திருவருகைக்கால திருமடலில் நாம் வேண்டிக கொண்டபடி நற்கருணை ஆண்டுச் செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற வேளையில் தடைப்பட்டுப் போயுள்ள பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு நிதியோடு கூடிய ஒரு நிரந்தரத் தீர்வினை தமிழ் மக்கள் பெற்றுக் கொள்ள வழி வகுக்க வேண்டுமென நற்கருணை ஆண்டவரிடம் சிறப்பாகச் செபியுங்கள் என்பதே அவ் வேண்டுகோள் ஆகும்.

உலகின் ஒளியாகப் பிறந்த பாலன் இயேசு மண்ணில் தோன்றிய சமாதானப் பேச்சுக்கள் என்ற ஒளி எம் மண்ணின் மேலும், மக்கள் மேலும் நிரந்தர ஒளியாக மாற வேண்டி நத்தார் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

## மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசப்பு ஆண்டகை

மீணடும் ஒரு தடவை எம் ஆண்டவரும் மீட்பருமான இயேசுவின் பிறப்புவிழாவை நாம் எதிர்கொள்கின்றோம். இம் மகிழ்ச்சியான விழாவானது அன்பே உருவான இறைவனின் மனித அவதாரத்தின் முன்பாக எம்மை நிறுத்தி எங்கள் இதயங்களால் அவரைச் சந்திக்க வைக்கின்ற விழாவாகும்.

அன்பு என்ற வார்த்தைக்கு இன்றைய சமூகம் பல்வேறு அர்த்தங்களைக் கொடுக்கின்றது. அன்பே கடவுள் எனறு இந்த அன்பை புனித யோவான் வரைவிலக்கணப்படுத்துகின்றார். இந்த அன்பின் ஆழமான அர்த்தத்தைப் புரிந்துகொள்ள, புனித யோவான் எழுதிய முதல் திருமுகத்தைச் செப மன நிலையோடு வாசிப்பது நமக்கு உதவியாயிருக்கும்.

கடவுளுக்காக அரிய பல செயல்களைச் செய்ய இந்த அன்பு நமகது சவால் விடுப்பதை நாம் உணருவோம். 'தந்தை என்னை அன்பு செய்ததைப் போல நான் உங்களை அன்பு செய்தேன் நான் உங் களை அன்பு செய்தது போல நீங்களும் ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள்' இதுவே இயேசுவினுடைய வாழ்வின் சுருக்கமும் அவர்களது சீடர்களாகிய நமக்கு அவர் விடுக்கும் அழைப்புமாகும். லூக்காஸ் நற்செய்தி 6 ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளதைப் போன்று பகைவரையும் அன்பு செய்ய இந்த அன்பு நம்மை அழைக்கின்றது. எனவே இப்படிப்பட்ட அன்பு மனிதாவதாரம் எடுத்திருக்க அதன் பிரசன்னத்தில நம் மை நிலை நிறுத்தி இன்றைய வாழ்க்கை சூழலில், அது நமக்கு விடுக்கின்ற அறை கூவல்களைச சிரமேற்கொள்வதே இந்த விழாவிற்கு அர்த்தம் தருவதாக இருக்கும்.

கடந்த 3 ஆண்டுகளாகப் போர் அனர்த்தங்களைச் சந்திக்காத ஒரு சமாதான நம்பிக்கையோடு நாம் பயணம் செய்து கொண்டிருந்தோம். இந்த நம்பிக்கை இன்று சவால்கள் ஏற்பட்டிருந்தாலும் 'கடவுள் நம்மோடு' எனும் அர்த்தம் பெறும் இம்மானுவேல் இறைவன் நம்மோடு இருப்பதால் நாம் நம்பிக்கை இழந்து விடமுடியாது.

அதனால் தான் போர் நிராகரிக்கப்பட்டு பேச்சுவாாத்தையின் வழியிலே சமாதானம் தேடப்பட, எம்மை நாம் அர்ப்பணிக்கவேண்டும். சமாதானத்துக்கான மக்கள் சக்தி அகிம்சைப் போராட்டத்தின் வழி என்றும் இல்லாத ஒரு விதத்தில் வல்லமையோடு வெளிக்கொணரப்படவேண்டும்.

இதற்காக மக்கள் விழித்தெழ வேண்டும். 20 ஆண்டுகள் போரின் ஊடாக கசப்பான அனுபவங்களைக் கற்ற நாம், அத்தனை 20 ஆண்டுகள் எடுத்தாலும் சமாதானத்தை அரசியல் ரீதியாகப் பெறுவதே நமது வழியாக அமையவேண்டும். இதற்கான அர்ப்பணத்தை நாம் புதுப்பித்துக்கொண்டு கரம் கோர்த்து முன்னேற இந்தப் பெருவிழா நம்மை அழைத்து நிற்கின்றது.

கிறிஸது பிறப்பு விழாவின் அன்பு, மகிழ்ச்சி, அமைதி உங்கள உள்ளங்களையும் இல்லங்களையும் நிரப்ப வேண்டி நிற்கின்றேன். நீதியோடு கூடிய நிரந்தர சமாதானம் எம் மண்ணில் விரைவில் மலர ஆசித்து நத்தார் புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் அதி வண.கலாநிதி எஸ்.ஜெபநேசன்

கிறிஸ்மஸ் வாழ்த்துதல்களை வலம்புரி வாயிலாக வலம்புரியின் வாசகர்களுக்கும் மற்றும் கிறிஸ்தவ அடியார்களுக்கும் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.



இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த ஓர் இயக்கத்தை நாம் கொண்டாடுகின்றோம். பெத்லகேமலே ஒரு மாட்டுத் தொழுவத்தில் ஒரு குழந்தையினுடைய பிறப்புடன் இந்த இயக்கம் ஆரம்பமாகியது. அது மன்னிப்பு வழாங்குமு இயக்கம் ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கும இயக்கம்!! ஒடுக்கப்பட்டவர்கள், உரிமை இழந்தவர்கள், சமுதாயத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டவர்கள் ஆகியோருக்காக குரல் கொடுக்கும் இயக்கம்!!!

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கிறிஸ்மஸ் தினங்கள் வந்து போய்விட்டன. கிறிஸ்துவினுடைய பணி இன்னும் முடியவில்லை. அவர் தம்முடைய பணியைத் தொடர தம்முடைய சீடர்களையே விட்டுவிட்டுச் சென்றுள்ளார்.

'இந்தச் சிறியரில் ஒருவருக்கு எதை செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்' என்றார் ஆண்டவர் இயேசு. உதவி தேவைப்படும் மக்களுக்காக குரல் கொடுப்பதும், அல்லற்பட்டுக் கண்ணீர் வடிக்கும் மக்களுக்கு ஆறுதல் அளிப்பதும், தனிமைப்பட்டவர்களுக்கும், ஆறுதல் அற்றவர்களுக்கும், உதவி அளிப்பதும் இயேசுபிரான் செய்த பணிகளாகும்.

இப்புனித தினத்திலே அந்த இலட்சியங்களுக்காக நம்மை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்வோமாக.

நத்தார் குதூகலமும், புதுவருடம் முழுவதும் உங்களுடன் கூட இருப்பதாக!

## திருகோணமலை -மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் அதி.வண.கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

கிறிஸது பிறந்த இந்த இனிய நாளிலே எல்லா மக்களுக்கும் சாந்தி, சமாதானம், மகிழ்ச்சி அனைத்தும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.

அனைவருக்கும் விடுதலை, சமாதானம் வேண்டும் அதற்குத் தேவை நல்ல மனம். 'உலகில் நல்மனத் தோர்க்குச் சமாதானம்' இந்த நல்ல மனங்களை உருவாக்குவதே இயேசு பிறப்பின் இலக்காகும். அவரது போதனை, வாழ்வு எல்லாம் இதனையே மையம் கொண்டிருந்தது. ஏழைகள், அநாதைகள், விதவைகள், கைவிடப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் மேல் அவர் விசேட அக்கறை காட்டினார்.

ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர்
துயருறுவோர் பேறுபெற்றோர்
அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்
தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்
நீதி நிலை நாட்டும் வேட்கை கொண்டோர் பெறுபெற்றோர்

இவ்வாறு அவரது மலைப் பொழிவுப் போதனைகள் அவர் தம் பிறப்பின் நோக்கத்தைப் புலப்படுத்தும் உரைகளாகும்.

கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடும் இந் நாட்களில் இவற்றை மீட்டுப் பார்த்தல் பொருத்தமானதும் அவசியமானதுமாகும்.

சிறப்பாக அன்பைப் பகிர்ந்து கொள்ளுவதும் பகைமை மறந்து சமாதானத்தை ஏற்படுத்துவதும் வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமை காணப்பதும் கிறிஸ்தவர்களது கடமையாகும்.

துரதிர்ஷ்டவசமாக நமது நாட்டில் சமாதான முன்னெடுப்புகள் முடங்கிப் போயுள்ளன. பொருளாதார நிலை இன-மத ஒற்றுமை, சமூகவிழுமியங்கள், இளைய தலைமுறையினருக்கான வழிகாட்டல், ஒழுக்க நெறிகள் அனைத்திலும் பாதகமான ஒரு சூழ்நிலையே நிலவுவதைப் பார்க்கின்றோம். இவ்வேளையில் நாட்டுத் தலைவர்கள், மக்கள் தலைவர்கள் மிகுந்த பொறுப்புணர்வோடு செயற்படவேண்டியுள்ளது. அதிகாரப் போட்டிகள் கட்சிப் போட்டிகள், இவற்றுக்கு அப்பால நின்று, நாட்டின் நலனைக் கருத்திற் கொண்டு, இவர்கள செயற்பட முன்வரவேண்டுமென்று அழைப்பு விடுக்கின்றோம்.

குறிப்பாக சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள மந்த நிலை முழுநாட்டுக்குமே ஆபத்தானது. இது அரசியல், பொருளாதார, சமூகரீதியாக பெருந்தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. ஆகவே உடனடியாகச் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அனைவரும் முன்வரவேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பொறுத்தமட்டில் நாட்டில் நிலவும் இரண்டும் கெட்டதான ஒரு நிலை கிழக்கு மாகாணத்துக்குப் பெரும் சவாலாக உள்ளது. அண்மைக் காலமாக இங்கு பழிவாங்குதல்கள் போன்றவற்றை முடிவுக்குக் கொண்டு வருவது அவசியமாகும். வெடிகுண்டுகளை வீசிக் கொண்டு, நாம் சமாதானத்தை எதிர்பார்க்க முடியாது. குறைகள் உள்ளதாயினும், முழுமையற்றதாயினும் சமாதான உடன்படிக்கையைப் பாதுகாக்க அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும்.

சமாதான உடன்படிக்கையின் பின் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிம்மதியை, போக்குவரத்து வாய்ப்புக்களை, தனிப்பட்ட அளவிலான அபிவிருத்திகளை நாம் முற்றாகப் புறந்தள்ளிவிட முடியாது. இருதசாப்த காலமாகப் போரின் சுமைகளைச் சுமந்து புண்பட்டுப் போன மக்களுக்குத் தற்போது ஓர் ஆறுதல் ஏற்பட்டுள்ளது. ஆகவே இச் சமாதானச் சூழலை நாம் வரவேற்று மேலும் வளர்த்தெடுக்க வேண்டுமேயன்றி ஆயுதங்களைக் கூராக்குவது அது யாராக இருந்தாலும் புத்திசாலித்தனமானதன்று.

வாய்ப்புக்களைத் தவறவிடுவதும் நமக்குள்ளேயே மோதி அழிவதும், அச்சுறுத்துவதும், நமது இளைஞர்களின் எதிர்காலத்துக்கு நாமே தடைக்கல்லாக நிற்பதும் வரலாற்றில் மாறாத வடுவாக நிற்கும் என்பதை உணர்ந்து கொள்வது அவசியம். ஆகவே, மக்கள் அனைவரும் நிலையான சமாதான முயற்சிகளுக்குத் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

பேச்சுவார்த்தை மூலமோ அல்லது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை மூலமோ சமாதானத்திற்கான அடித்தளம் இடப்பட்டாலும், குறிப்பாக இனங்கள், மதங்களுக்கிடையேயான மோதல்கள், மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட குழுக்களுக்கிடையிலான மோதல்கள் நிலவும் வரை நிலையான அமைதியையும் அர்த்தமுள்ள சமாதானத்தையும் அடைய முடியாது என்பது நிச்சயம்.

அண்மையில் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட பெரு மழையும் வெள்ளப் பெருக்கும் எமது மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். அவர்களது வீடுகளும், பொருட்களும் அழிந்து போயுள்ளன. உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. அவலத்துக்குள்ளாகி அந்தரித்து நின்ற இம் மக்களுக்குத் தகுந்த நேரத்தில் உதவிகளோ, பராமரிப்போகிடைக்காமல் போனதும் துரதிர்ஷ்ட வசமானதாகும். பொறுப்புள்ளவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காமல் போனது வருந்தத்தக்கது. துன்பத்தில் இருப்போருக்கு உதவுவது ஒரு மனித நேயப் பணி. சிறப்பாக அது ஒரு கிறிஸ்தவப் பணி. கிறிஸ்துப் பிறப்புக்காலத்தில் இத்தகையதோர் அவலம் நேர்ந்திருப்பதைக் கவனத்தில் கொண்டு கிறிஸ்தவ மக்கள் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்களில் பங்கு கொண்டு உதவி புரிவது கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டத்துக்கு மிகவும் பொருள தருவதாகும். பிறக்கவிருக்கும் புத்தாண்டில் நமது மக்களின் துன்ப, துயரங்கள் அனைத்தும் நீங்கி நிரந்தர சமாதானமும் சுவீட்சமும் நிறைந்த வாழ்வு கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அனைவருக்கும் நத்தார், புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித் தாகுக.

மின் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

**வேலணை பண்டிதர் பொ. ஜெகந்நாதன்** 19

இராசமந்திரி பேரமை சன் என அப்புவ னேகவாகு சொல்லப்பட்டுள்ளார். அரசனுக்கு மந்திரி என்றவகையினாலே அரசனுக்கு மந்திரி புத்தி சொல்ல அப்பால் அரசனும் மந்திரியும் சேர்ந்தே அத்தலைநகரைக் கட்டியிருப்பார்கள் என்பது விளக்காமலே விளங்கக்கிடப்பது. எனவே அரசன் கட்டினான். என்றேனும் அமைச்சன் கட்டினான் என்றேனும் அரசனும் அமைச்சனும் கட்டினான் என்றேனும் வருங்கூற்றுகளில் யாதாமொன்றைச் சொல்லினும் அது உண்மைக்கேற்புடையதே ஈண்டு அரசனது முதன்மைத தலைமை கருதியும் இத்தலைநகர் வரலாற்றுப் புருடன் அவனானமை கருதியும் கைலாயநாதன் அவனது கனவிலேயே தோன்றி நம் பெயர் கைலாயநாதன் என்று சொன்னமையாலும் இக் கைலாயமாலை அவனே தலைநகர் அமைத்தான் என்று சிறப்பித்துப் பாடியது இஃதிவ்வாறாக இவனது அமைச்சனாகிய புவனேகவாகு தனது தனித் தொடர்போடு நல்லூர்க்கந்தசுவாமி கோயிலைக் கட்டினான். எனவே மன்னனைச் சுட்டி மாலையுள்ளும் மந்திரியைச் சுட்டி தனிச்செய்யுளும் தோன்றின. அம்மந்திரியே சிங்கை நகரியையும் கட்டுவித்தான். ஆதலின் ஆண்டும் அச் சிங்கை நகர் கட்டின ஆண்டே ஆதலின் அத்தனிச் செய்யுள் இலக்கிய சகாப்தம் எண்ணூற்றெழுபதிலே, மந்திரியாம் புவனேகவாகு யாழ்ப்பாண நகரியை முன்னர் கட்டுவித்து முடித்து அப்பால் நல்லூர்க்கந்தசுவாமி கோயிலைக் கட்டினான் என்று பாடியது அம்மாலையைப் பாடுவித்தோர் அம் மாலையினுள்ளே மன்னனையும் அவனோடு மந்திரியையும் பாட விரும்பாமலேதான் இவ்வாறு தனியே பாடினார் என்க.

அஃது அன்னாரது நூலமைப்பேதான், சட்டநாதர் கோவில் திருமுத்துச்சாமிப்பிள்ளை அவர்களோடு அக்கோவில் வரலாறு பற்றி அளவளாவியபோது சட்டநாதர் சிவன் கோவில் இராசா கட்டினது என்றும் நல்லூர்க்கந்தசுவாமி கோயிலை மந்திரி கட்டினது என்றும் இவ்வு,ருக்குள்ளே கர்ணபரம்பரைக் கதையுண்டென்றும் சொன்னார். எனவே வல்லிபுரத்தில் கலிங்கமாகன் தலைநகர் கட்டவில்லை. செண்பகப் பெருமான் நல்லூரில் தலைநகர் முதன்முதலாகக் கட்டவில்லை. யாழ்ப்பாண மன்னனின் கொட்டத்தை அடக்கக் கோட்டை அரசனால் ஏவப்பட்டுப் படை எடுத்தான் எனவும் அவன் கனகசூரியன் இருந்த தலைநகருக்கு படையெடுத்தான் எனவும் அறிக. அக் கனகசூரியன் இருந்த தலைநகரத்தை யார் கட்டினான் அது தான் (ஆதி சிங்கையாரியனும்) அமைச்சர் புவனேகபாகு கட்டிய வைபவமாலை சொன்ன கி. பி. 948 இல் கட்டப்பட்டதலை நகரம் என்க.

***நல்லூர்த் தலைநகர்க் காலம்***

வைபவமாலை பக் 26இல் அத்தலை நகரைக் கட்டிய ஆதிசிங்கையாரிய மன்னன் கீழ்த்திசைக்குக் காப்பாக வெயில் உவந்தபிள்ளையார் கோவிலையும், மேற்றிசைக்கு வரமாகாளியம்மன் கோவிலையும், வடதிசைக்கு சட்டநாதர் கோவிலையும், தையல்நாயகியம்மன் கோவில், சாலை விநாயக் கோவிலையும் கட்டுவித்துத் திலகதியார் என்னும் புத்திரியுடனே கிருகப்பிரவேசம் செய்து வாழ்ந்திருந்தான் என்று சொல்லுகின்றது. சில பிரதிகளில் வடக்கே தலங்காவற் பிள்ளையார் கோவிலையும் தெற்திசைக்குக் கைலை விநாயகர் கோவிலையும் கட்டுவித்தான் என்றுரைக்கின்றன ஆகையால் இக்கோவில்களை நாற்பக்கமும் வெளயே விட்டு இக்கோவில்களின் உட்பக்க அருகாக ஒரு கோடிழுத்தால் அதுதான் அரண்மனை இருந்த களம் ஆகும். இதற்குள்ளேதான் சங்கிலியன் தோப்பு யமுனா ஏரி வருகின்றன. இது அகநகர் எல்லை புறநகர் எல்லை வெளியே ஆனைப்பந்தி அடியார்க்கு நல்லார்குளம் ஆரியகுளம், (பழக்கப்படாத ஆனைகளைக் கோட்டைகட்டிய) ஆனைக்கோட்டை என்பவற்றைச் சேர்ந்த நிலங்கள் என்பன இவ்வகநகர் எல்லைக்குள்ளே தான் இராசபரம்பரையினர் பெயருள்ள நிலங்கள், குளங்கள் அனேகம் இருக்கின்றன. என்னை இக்கோவில்கள் பண்டைக் காலத்தனவா அன்று அக்கோவில் கட்டப்பட்டதானம் பண்டைக் காலத்தன. அப் பழைய கோவில்கட்டடமும் அதற்குள்ளே இருக்கும் விக்கிரகங்களும் பெரும்பாலும் இப்போ இல்லை எனலாம். அவை போர்த்தர்காலம் தொடக்கமாக அழிபட்டும் போயின. அந்த அழிந்த இடங்களிலே அவை பண்டைக்கால அரசர் கோவில் இருந்த இடங்களெனவெண்ணிப் பின் வாழ்ந்துவந்த குடி மக்கள் அக்கோவில்களைக் கட்டி விக்கிரஙகளையும் வைத்து வழிபட்டு வந்திருக்கின்றார். அக்கோவில் பிளம்பு (உருவம்) இப்பொழுது நமக்கு எல்லையைக் காட்டுகின்றன என்று தேர்க.

அங்ஙனம் அந்நகரிலே ஆதிச்சிங்கையாரியன் அரசுக்கு வந்தானாக வயசு முதிர்வில் அவன் தன் மகன் குலசேகரசிங்கையாரியனுக்கு முடிசூட்டினானாக. இப்படியே மைந்தன் வழி மைந்தனாக இந்த இராசபரம்பரை கி.-பி. 948ஆம் ஆண்டு தொடங்கி கி. பி1450 வரையும் அதே தலைநகரிலே சரும் சிறப்பும் பேரும் புகழும் பெருக. செகராசசேகரன், பரராசசேகரன் என்னும் சிங்காசனப் பட்டத்தையும் பெற்று அரசு புரிந்து வந்தார்களாக. அவர்கள் இலங்கை எங்கனும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் யாழ்பாணத்தமிழ் அரசனென்று சுட்டிப் பேசப்பட்டு வந்தார்கள். 9ஆவது அரசன் செயவரசிங்கையாரியன் காலத்திலே இலங்கை முழுவதையும் அவன் ஆட்சி புரிந்தான் என்றும் சொல்லுகிறார்கள் அவ்வளவுக்கு அவர்கள் செல்வாக்குப் பரவியிருந்தது. இவ்வரசபரம்பரை மன்னன் ஒருவன் 11ஆம் நூற்றாண்டில் சிதம்பரத்துக்குப் போய்ப் பரராசசேகரன் மடங்கட்டி சூரியமூர்த்தித்தம்பிரானை நியமித்துச் செப்புப்பட்டயம் எழுதிக் கொடுத்துச் சிதம்பர தானம் வழங்கினான். 12ஆம் நூற்றாண்டில் உள்ள இப் பரம்பரை மன்னன் காலத்திலே புகழேந்திப் புலவர் இந்த அகநகரெல்லைக்குள்ளே காலடி கொண்டு நடந்துவந்து தான் இங்கே இருந்த அரண்மனை மன்னனிடம் ஆனையும் நிதிக்குவையும் வாங்கினார். இப் 12ஆம் நூற்றாண்டில் (முன்னா 14ஆம் நூற்றாண்டென்று வெளியானது) தான் இவ்வரண்மனைச் சேனாபதி பொப்பண்ண காங்கேயர் கோன் சிலப்பதிகாரத்துக்குரை செய்வித்தார். செய்த அடியார்க்கு நல்லார்க்கு அரண்மனையும் குளமும் வெட்டிக் கொடுக்கப்பட்டன. அவைமுறையே அடியார்க்கு நல்லார் வரம்பு எனவும் அடியார்க்கு நல்லார்க் குளம் எனவும் பெயர்கள் பெற்றன. அந்நகரிலே இருந்த மன்னானலே தான் பரராசகேகரம் என்னும் வைத்திய நூலும் செகாரசேகரமாலை என்னும் சோதிட நூலும் இயற்றப் பெற்றன. அவை 13ஆம் நூற்றாண்டு வரையில் இந்த எல்லைக்குளளே இருக்கும 'ப' வடிவில் அமைந்த யமுனா ஏரியில் இராசகுல ஆடவர் ஒரு பக்கமாகவும் மகளிர் ஒரு பக்கமாகவும் நராடினார்கள்.

(தொடரும்)

## மாகாண சபையின் நூல் விநியோகம் திருப்திகரமானதாக அமையவில்லை

## கல்வியாளர்கள் விசனம்

(கோப்பாய்)

உலக வங்கியின் நிதியில் வடக்கு-கிழக்கு மாகாண சபையால் கொள்வனவு செய்யப்பட்ட நூல் தொகுதிகள் யாழ்.மாவட்டத்தின் ஐந்து வலயங்களிலுள்ள நவீனமயப்படுத்தப்பட்டுள்ள நூல் நிலையங்களையுடைய தரம் இரண்டு பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

ஆயினும் இந் நூல்களில் பெரும்பாலானவை இப் பாடசாலைகளுக்கு பயனற்றவையாகக் காணப்படுவதாகக் கல்வியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வழங்கப்பட்ட நூல்களில் பெரும்பாலானவை கல்வி பொதுத் தராதர உயர்தர வகுப்பின் பாடசாலைகளுக்கே பொருத்தமானவையாக அமைந்துள்ளமையால் இவை நூல் நிலையங்களை அலங்கரிப்பதற்கே பயன்படுவதாகவும் இவ்விடயத்தில் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ப-79)

## சேவை மாற்றுத் திட்ட நடைமுறைக்கு சுகாதார ஊழியர் தொழிற்சங்கம் எதிர்ப்பு

(கொழும்பு)

சுகாதார சேவையிலுள்ள மருத்துவ ஆய்வு கூட உதவியாளர்களுக்கு சேவை மாற்றுத்திட்டம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவுள்ளது.

இந் நடைமுறையில் தாம் விழிப்புடன் இருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை, இந்த முறை செயற்படுத்தப்படுமானால் அதில் தமது தொழில் பாரியளவு பாதிக்குமென சுகாதார ஊழியர்களின் தொழிற்சங்க ஏற்பாட்டாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

ரவி குமுதேஷ் மேலும் தெரிவிக்கையில், இந்த முறையானது எமது தொழிலுக்குப் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தும். இதனை நாம் சுகாதார அமைச்சருக்கும் தெரிவித்துள்ளோம் எனினும் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவில்லை எனவே இதனை எதிர்த்து பணிப்புறக்கணிப்புக்குத் தயாராக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார். (ற-9)

### தேர்தலில் போட்டியிடுவதற்காக

## அரச சேவையிலிருந்து விலகியோருக்கு ஓய்வூதியம் வழங்க துரித நடவடிக்கை

(கொழும்பு)

தேர்தலில் போட்டியிடுவதற்காக அரசாங்க சேவையில் இருந்து விலகியவர்களுக்கு ஓய்வூதியம் பெறக்கூடிய வகையில் சட்டத்தில் திருத்தஞ் செய்ய பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசாங்க சேவையில் இருந்து விலகி தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியடைந்த ஆயிரக்கணக்கானோர் தங்களுக்கு நிவாரணம் அளிக்குமாறு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இதன்படி 10 வருடங்களுக்கு மேல் அரசாங்க சேவையில் கடமையாற்றிய பின்னர் பதவி விலகி தேர்தலில் போட்டியிட்ட ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

அந்த வகையில் 55 வயது பூர்த்தியடைந்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-9)

## அடுத்த வருடத்திற்குள் அனைவருக்கும் அ.அட்டை

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டை இல்லாத அனைத்துப் பிரஜைகளுக்கும் அடுத்த வருடத்துக்குள் அவற்றை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என ஆட்பதிவுத்திணைக்களத்தின் ஆலோசகர் பந்துலகுலதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தத் தேசிய அடையாள அட்டைகள் கணனி ஊடாக வழங்கப்படவுள்ளன. தற்போது இருக்கும் கறுப்பு வெள்ளைப் படங்களுக்குப் பதிலாக வர்ணப்படங்களை அடையாள அட்டையில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்திட்டமானது மாவட்டச் செயலகங்கள் மட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்குக் கிராமசேவகர்களின் உதவியும் பெறப்படவுள்ளது.

அடுத்த வருடம் ஜனவரி மாதத்தின் நடுப்பகுதியில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது . பத்து வருடங்களுக்கு மேலாக தேசிய அடையாள அட்டை உள்ள சகல பிரஜைகளும் இப்புதிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். (ற-8)

## எம்.ஜி.ஆரின் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் திலகமும் முன்னாள் தமிழக முதல்வருமான அமரர் கலாநிதி எம்.ஜி.ஆரின் 17ஆம் ஆண்டு நினைவு நாளும் அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவையின் தலைவர் பொன்.மதிமுகராஜாவின் 6ஆம் ஆண்டு நினைவு நாளும் நேற்று முதல் தாவடிப்பிள்ளையார் ஆலய திறந்தவெளி அரங்கில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இந்நிகழ்வுக்கு எம்.ஜி.ஆர் இளைஞர் அணித்தலைவர் பொன். மதிமுகராஜா விஜயகாந் தலைமை வகிக்கவுள்ளார்.

இந்நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-4)

# நத்தார் சிறப்புக் கவிதைகள்



## மாண்புறு தேவனாய் மலர்ந்தவர் கிறிஸ்து

வெண்பனி குளிர்தனில் வெள்ளியும் ஒளிரவே
வைக்கோலில் இறைமகன் பாலகன் பிறந்தார்
புண்ணிய பதியுமாய் பெத்தலகேம் நகர்
பேற்றினை பெற்றுமே பாரெங்கும் துலங்குது
மண் மீது மாண்புறு தேவனின் புதுமை
மனங்களில் என்றுமே மகிழ்வுறும் மகிமை
எண்திசை என்றுமே இயேசு கிறிஸ்துவை
ஏற்றமாய் போற்றியே நெஞ்சார துதிப்போம்

அல்வையூர் கே.ஆர்.திருத்துவராஜா.

## விடுதலையை மீட்டுத் தாருங்கள்!

பதினாறு வயதில் ஈழவிடுதலைக்காக
சிலுவை சுமந்தார்
தொடர்ந்தும் சுமக்க முடியாதப்பா
விடுதலையை மீட்பர் காலத்திலேதான் மீட்கவேண்டும்
விழுவதெல்லாம் அழுவதற்கல்ல எழுவதற்கே!
அழுபவனே எழுவானென்பது
எமக்குத் தான் பொருந்தும் !
மீட்பரே! விடுதலையை
பேச்சு பெற்றுத் தராது
போராடுபவையெல்லாம் ஜெயித்தே தீரும்
நீங்கள் ஜெயிக்கப் பிறந்தவர்
போராடுங்கள் வெற்றி நமதே!
பொறுமைக்கு எல்லையுண்டு
எம் உரிமை பறித்தவனிடம்
பறித்துத்தான் எடுக்கவேண்டும் என்பது நியதி போலும்
அவலத்தைத் தந்தவனுக்கே திருப்பிக் கொடுப்போம்
உடையுங்கள் எங்கள் உரிமையைப் பறியுங்கள்
உலகமே உங்கள் பின்னால் எழும் – விரைவில்
நல்ல செய்தியைத் தாருங்கள்
விடுதலையை மீட்டுத் தாருங்கள்



யோ.யூட்நிமலன் காந்தருபன் அறிவுச்சோலை.

## மனந்திறக்க ஏனோ மறந்தோம்!

ஒளியின் பிரவகம்
உம் பிறப்பு
எப்போ உலகிற்கு
இருள் கலைப்பு?
மீட்பின் சுவடுகளை
தந்த உம்பாதையினை
நாட்டங்கொள்ளா
மனிதரானோம் – அதனால்
நாளும் குட்டிச் சுவராய்ப்போனோம்!
பிறர் நலனை
மறந்த நாங்கள்
அவர் நலனை
பறித்து வாழ்ந்தோம்
வேரறுந்த மரங்களாக
பாரதிலே சாய்ந்து போனோம்!
ஆண்டவனின்
அன்பு மகன்
உம் பிறப்பில்
உளம் தெளிந்து
அன்பு மலராக எம்மை
ஆக்கிடவே வேண்டுகின்றோம்!

சூரியநிலா , ஈச்சமோட்டை.

## வந்தனங்கள் சாற்றிடுவோம் வாரீர்

வெள்ளி மலை மீதில் மிருகமடைகுகையில்
அல்லி நடுச் சாமதுமல கன்னி – புல்லணையில்
வந்து திருப் பாலனையாம் சாஷ்டாங்கம் செய்து சுப
வந்தனங்கள் சாற்றிடுவோம் வாரீர்

வி.பிரான்சீஸ், ஊர்காவற்றுறை.

# மேஜர் முரளி உட்பட 10 மாவீரர்களின் 17ஆம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய்ப் பகுதியில் கடந்த 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த மேஜர் முரளி உட்பட பத்து மாவீரர்களின் 17 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் காலை உரும்பிராயில் உள்ள இவர்களது நினைவுத் தூபி முன்றலில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிகழ்வில், பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட துணை அரசியல் துறைப்பொறுப்பாளர் செம்மணனும், தமிழீழத் தேசியக் கொடியினை கோப்பாய் அரசியல்துறைப் பொறுப்பாளர் சங்கரும் ஏற்றி வைத்தனர்.

அத்துடன், மேஜர் முரளியின் நினைவுத்தூபிக்கு அவரது தாயார் திருமதி வேலுப்பிள்ளையும், கப்டன் நிராவின் நினைவுத்தூபிக்கு யாழ்.மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் ஆரவலனும், கப்டன் காந்தியின் நினைவுத் தூபிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் இணைப்பாளர் கண்ணனும், லெப்.தர்சினியின் நினைவுத்தூபிக்கு யாழ்.மாவட்டத் துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணனும், வீரவேங்கை நிர்மலாவின் நினைவுத் தூபிக்கு யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பனும், வீரவேங்கை நிதியின் நினைவுத்தூபிக்கு யாழ்.மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணாவும் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

அத்துடன், வீரவேங்கை பஞ்சனின் நினைவுத்தூபிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் பகீரதனும், வீரவேங்கை மிகிந்தாவின் நினைவுத் தூபிக்குக் கோப்பாய் அரசியல்துறைப் பொறுப்பாளர் சங்கரும், வீரவேங்கை சுதாவின் நினைவுத் தூபிக்குக் கல்வியியற் கல்லூரி மாணவர் ஒன்றியத்தலைவர் சுதனும், வீரவேங்கை அமுதனின் நினைவுத் தூபிக்குக் கோப்பாய்ப் பிரதேசத்தைச் சேர்ந்த மருத்துவபீட மாணவன் வேணுகோபாலனும் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து, இந் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்கள் மலர் அஞ்சலி செலுத்தினர். யாழ். மாவட்டத் துணைஅரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் கல்வியியற் கல்லூரி மாணவன் சுதன் ஆகியோர் இந் நிகழ்வில் உரையாற்றினர். (ற-19)

# பட்டப்பகலில் ஓடுபிரித்து நகையும் பணமும் திருட்டு

(பருத்தித்துறை)

பட்டப்பகலில் ஓடு பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் வீட்டிலிருந்த ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் 10 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் புலோலி மேற்கிலுள்ள நெல்லியடி வர்த்தக வங்கியில் கடமைபுரியும் எஸ்.மணிவண்ணன் என்பவரது வீட்டில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றுள்ளது.

வீட்டிலிருந்து கணவனும் மனைவியும் வேலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய போதே நகைகளும் பணமும் திருட்டுப்போனமை கண்டுபிடிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ச-52)

# 'வக்களிப்பில் இலத்திரனியல்முறை' குறித்து ஆராய விஷேடகுழு வெளிநாட்டுக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கையில் இலத்திரனியல் முறை மூலம் தேர்தலை நடத்துவது குறித்து ஆராய்வதற்காக அரசியல் கட்சிகளின் தலைவர்களின் குழுவொன்று வெளிநாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ள விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தலைமையில் இந்தக் குழுவினர் இந்தியா, அமெரிக்கா, கனடா, ஜேர்மனி மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளுககு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

தற்போது இலத்திரனியல் மாற்றுப் பதிவினை வெற்றிகரமாகச் செயற்படுத்தும் இந்த நாடுகளின் தேர்தல் நடைமுறை குறித்து இந்தக் குழுவினர் ஆராயவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலத்திரனியல் முறைமூலமான வாக்களிப்பை அறிமுகப்படுத்துவதற்கேற்ற வகையில் தேர்தல் திருத்தச் சட்டமூலமொன்று விரைவில் கொண்டுவரப்படவுள்ளதாக அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார். (ற-9)

# புங்குடுதீவில் பரிதாபம்

## பாழுங் கிணற்றில் வீழ்ந்து சிறுமி ஒருவர் உயிரிழப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில உள்ள கைவிடப்பட்டகாணியில் அமைந்திருக்கும் பாழடைந்த கிணற்றினுள தவறி வீழ்ந்து சிறுமி ஒருத்தி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த முத்துக்குமாரு - நாகதர்சனா (வயது -8) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

காணாமல் போன தன் வீட்டு மாட்டைத் தேடிப் பிடிப்பதற்காகச் சென்ற தாயுடன் கூடச் சென்ற சிறுமி கைவிடப்பட்ட காணி ஒன்றினுள் மாட்டைத் தேடிய வேளை சிதைவடைந்து தரை மட்டத்தில் இருந்த பாழடைந்த கிணற்றினுள் வீழ்ந்துள்ளார் எனத் தெரியவருகிறது.

இவர் புங்குடுதீவு கணேச வித்தியாலயத்தில் தரம் 3 இல் கற்கும் மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப-126)

# சூரிய காந்தியை பெருமளவு பயிரிடுவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

தேங்காய் எண்ணெய்க்கு பதிலாக சூரியகாந்தி எண்ணெயை உபயோகிக்கும் திட்டமொன்றினை அறிமுகம் செய்யவுள்ளதாக ஊவா மாகாணக் காணி விவசாய, வன வள அமைச்சர் டபிள்யூ.டீ.விக்கிரமரத்ன தெரிவித்தார்.

எதிர்காலத்தில் தேங்காய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவி, தேங்காய எண்ணெய் கிடைக்காது விடுமென அஞ்சப்படுகிறது. இதற்கு மாற்று நடவடிக்கையாக சூரிய காந்தியை பயிரிட்டு அதன் மூலம் சூரியகாந்தி எண்ணெயினை உபயோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பதுளை மாவட்டத்திலும் மொனராகலை மாவட்டத்திலும் இச் சூரியகாந்தியைப் பயிரிட்டு அதற்குத் தேவையான உரங்களை வழங்கவும்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். இதற்கென மாகாண அமைச்சின் மூலம் ரூபா இரண்டு மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் மரக்கறி விவசாயத்தினை மேற்கொள்ளவென பல்வேறு நல்ல பல திட்டங்களை முன்வைத்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (க-9)

## லொறி புதைந்தது

(துன்னாலை)

பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் உள்ள முள்ளிப்பகுதியின் வீதியில் கனரக வாகனங்கள் சென்றதால் வீதி பலத்த சேதமடைந்துள்ளது.

இந் நிலையில் கடந்த வியாழன் தென்பகுதிக்கு வெங்காயப் பொதிகளுடன் சென்ற லொறி முள்ளிப் பகுதியில் நடுவீதியில் புதைந்தது. இதனால் அவ் வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டது.

அத்துடன், லொறி புதைந்த நிலையில் அப்பகுதியில் வீதியால் வந்த இராணுவ உழவ இயந்திரமும் அதே இடத்தின் அருகே புதைந்து விட்டது. (ப-101)

## சுலோகங்கள்

(பொலிகண்டி)

வடமராட்சி வலயக் கல்விப் பணிமனையினால் எழுதப்பட்ட சுலோகங்கள் சில வடமராட்சிப் பகுதிகளில் தொங்க விடப்பட்டுள் ளன.

இவற்றில் மூன்று வயதுப் பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்புங்கள், 'அத்திபாரத்தை உறுதியாக கட்டுங்கள்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. (ப-106)

## உதவி

(துன்னாலை)

கிழக்குப் பகுதியில் அண்மையில் பெய்த கடும் மழையினால் இடம்பெயர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென யாழ். குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட உலர் உணவுப பொருட்களும், உடுபுடைவைகளும் இன்று கொண்டுசெல்லப்படவுள்ளன. (ப-101)

## அரச அதிபருக்கு பாராட்டு விழா

(பருத்தித்துறை)

உலக வங்கியின் வடக்கு-கிழக்கு வீடமைப்பு நிர்மாணத் திட்டத்தின் கீழ் திட்டப்பணிப்பாளராக நியமனம் பெற்றுச் செல்லும் யாழ்.அரச அதிபர் எஸ்.பத்மநாதனுக்கு கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 28 ந் திகதி சேவை நலன் பாராட்டுவிழா நடைபெறவுள்ளது.

இச் சேவை நலன பாராட்டுவிழா கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச-52)

## புனரமைப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மகாவித்தியாலயத்துக்கும் ஆஸ்பத்திரி சந்திக்கும் இடையிலான 300 மீற்றர் தூரமான வீதி, வேலணைப் பிரதேச சபையின் உப அலுவலகமான புங்குடுதீவுப் பிரதேச சபையினால் புனரமைக்கப்படவுள்ளது. (ப-126)

இருள்சேர் இருவினையும் சேராஇறைவன்
பொருள் சேர்புகழ்புரிந்தார் மாட்டு - குறள்

வலம்புரி

# மனுக்குலத்தை மீட்க மீட்பவரே வருக

மனுக்குலத்தின் பாவத்தைபோக்க இப்பாரினில் வந்துதித்த யேசுபாலனின் பிறப்பு இன்றாகும்.

உலகம் முழுவதிலுமுள்ள கோடிக்கணக்கான கிறிஸ்தவ மக்கள் யேசுபாலனின் பிறப்பை கொண்டாடுகின்றனர். மனுக்குலத்தை மீட்க பாரினில் வந்துதித்த யேசுபாலனின் பிறப்பை உலகம் முழுவதும் கொண்டாடுகின்ற போதிலும் யேசுவின் போதனைகள், அவர் காட்டிய பாதைகள் எவ்வளவு தூரம் மானிடத்தால் போற்றப்படுகிறது- பாதுகாக்கப் படுகிறதென்ற கேள்விகள் எழவே செய்கின்றன.

மண்ணில் நல்லவண்ணம் வாழவேண்டிய மனித சமூகம் சீரியபாதையை தவறவிட்டு மந்தைக் கூட்டமாக அலைந்தபோது மானிடத்தை மீட்டெடுப்பதற்காக உதித்த யேசுபாலகன் மனிதர்களின் பாவச் சுமைகளை தானேசுமந்தார் - சிலுவையில் அறையப்பட்டார்- அவர்சிந்திய குருதி இந்த வையகத்தை புனிதப்படுத்தியது. மானிடத்தை இறைவன்பால் ஈர்த்தது.

அவரின் இப்புனிதப் பணி நமக்கெல்லாம் ஓர் செய்தியை உரைத்திருக்கிறது. எனினும் இதனை நாம் மறந்துவிட்டோம். சுயநலமும்- மதவாதமும் மேலோங்கி விட்டது. பாவச்சுமைகளால் மனித இனம் நசுங்கிப் போயுள்ளது.

மீட்பார் யாருமின்றி மனித இனம் இருள்சூழ்ந்த பாவக்குகைக்குள் அலைந்து திரிகின்றது. எங்கும் மனிதக் கொலைகள்-சுரண்டல்கள்-ஏழைகளின் அவலக்குரல்கள்-பணக்காரர்களின் திமிறல்கள்- ஆண்டான் அடிமைமுறைகள்- இன ,மொழி, மத நிறபேதங்கள்- எந்தவகையிலும் நிம்மதியற்ற வாழ்க்கை வையகத்தில் மகிழ்வோடு வாழவேண்டிய மனிதர்கள் இவ்வாறு அவலப்பட்டு, அல்லல்பட்டு ஆற்றழிவதற்கு காரணம்தான் என்ன?

ஆம், மனித இனத்தை மீட்க வந்த மீட்பரின் போதனைகள் பெட்டிகளுக்குள் பூட்டப்பட்டு விட்டன. உன்னைப்போல் பிறரையும் நேசி என்ற உயர்ந்த வாசகம் கட்டட வாசல்களை அலங்கரிக்கும் வார்த்தைக் கோலங்களாக மாறிவிட்டன. மனித மனங்கள் அழுக்காறு- அவா-வெகுளி- இன்னாச்சொல் என்ற பாவ விலங்கிற்குள் அகப்பட்டுவிட்டது. அதனால் இறை அருள் மனித உயிர்களைக் காவுகொள்வதற்கு என்றே ஆயுத உற்பத்திகள் நடந்துகொண்டே இருக்கின்றன.

இவை ஒரு புறம், மறுபுறத்தில் 'அன்பு' என்ற உயர் மனித விழுமியம் இன்று அறவே இல்லாமல் போய்விட்டது. எதற்கு எடுத்தாலும் கோபப்படும் மனநிலை உருவாகிவிட்டது. இதனால் ஒருவரின் துன்பத்தை மற்றவருடன் பகிர்ந்து கொள்கின்ற வழமைகள் வழக்கொளிந்து போயிற்று.

ஏழைக்காக-அநாதைகளுக்காக-அங்கவீனர்களுக்காக உதவும் கரங்களின் முகிழ்ப்பு முடங்கி உள்ளன. இதனால் 'மனிதம்' மதிப்பற்றதாகி விட்டது.

செல்வந்தர்கள் , செல்வாக்கு உடையவர்கள் அரசியல்வாதிகள் என்ற வர்க்கத்தினருக்கே இந்த உலகம் சொந்தம் என்பது போன்ற சூழ்நிலைகள் ஏற்படலாயிற்று. இதன் காரணமாக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சமூகவேறுபாடுகள் என்பன உச்சமடைகின்றன இத்தகைய குறுகிய சிந்தனைப் போக்குகளே உலகம் முழுவதிலும் வியாபகம் பெற்றுள்ளது.

எனவே, சகோதரத்துவம் என்ற உயரிய எண்ணக்கருக்கள் மறைந்து வெறும் எழுத்துருவாக்கங்களாமாறிவிட்டன.

எனவே இந்த உலகம் மீள வேண்டுமாயின், சமாதானம் நிலைக்கவேண்டுமாயின் யேசுபாலன் மீண்டுமோர் தடைவை இந்தவையகத்தில் உதிக்க வேண்டும். இதற்காக நல்ல உள்ளங்கள் தேவ குமாரனை இறைஞ்ச வேண்டும்.

# தென்னிலங்கையில் பரவிய மர்ம நோய் பறவைக்காய்ச்சலோ சார்ஸோ அல்ல

## டாக்டர் சுகத்பீரிஸ் தெரிவிப்பு

(மாத்தறை)

மாத்தறை மற்றும் எம்பிலியப்பிட்டிய பகுதிகளில் பரவிய ஆட்கொல்லி வைரஸ் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நோய் அறிகுறிகள் காணப்பட்ட 75 பேர் முழுமையாக குணமடைந்து வைத்தியசாலைகளை விட்டு வெளியேறியிருப்பதாக அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்பு பிரிவைச் சேர்ந்த டாக்டர் சுகப்பீரிஸ் தெரிவித்துள்ளார்.

10 நாட்களுக்கு முன் தேன்றிய வைரஸ் காய்ச்சல் எட்டுப்பேரைப் பலிகொண்டது. இந்நோய் நாட்டின் ஏனைய பகுதிகளை தாக்கியதாக இதுவரை அறியப்படவில்லை எனவும் டாக்ட்ர் பீரிஸ் கூறினார்.

இந்நோய்க்கும் எம்பிலிப்பிட்டிய துன்கம பிரதேச பண்ணைகளில கோழிகளுக்குப்பரவியதாகக் கூறப்பட்ட நோய்க்குமிடையே எந்தத்தொடர்பும் இல்லை.

வைரஸ்காய்ச்சல் தொடர்பான ஆய்வுகூட பரிசோதனைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன. ஹொங்கொங் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் இலங்கை ஆராய்ச்சியாளரான பேராசிரியர் மலிக் பீரிஸ் தாமும் இப் பரிசோதனைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளார். என டாக்டர் பீரிஸ்மேலும் தெரிவித்துள்ளார்.

மோசமான ஆட்கொல்லியாக கருதப்படும் சார்ஸ் வைரஸ்ஸை முதலில் இனங்கண்ட பெருமை மலிக் பீரிசையே சாரும் என்பது குறிப்படத்தக்கது. (ற-7)

# 500 பயிற்சிப் பட்டதாரிகளுக்கு சுகாதாரத்துறையில் நியமனம்

(கொழும்பு)

500 பட்டதாரிகளுக்கு சுகாதாரத் துறைக்குள் எதிர் வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

சுகாதார அமைச்சர் நிமால் ஸ்ரீபலா டி சில்வா இது தொடர்பாக தகவல் வெளியிடுகையில், பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் விசேட பயிற்சியைத் தொடர்ந்து சுகாதார சேவையில் 500பேர் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருத்துவத்துறை உத்தியோகத்தர்களை மேற்பார்வை செய்யவென 100 பட்டதாரிகள் கண் காணிப்பு அதிகாரிகளாக நியமிக்கப்படவுள்ளன. ஏனையோர் மக்கள் தொடர்பாடல் சேவையில் ஈடுபடுத்தப்படுவர். இவர்கள் இரவு பகலாக தொடர்ந்து கடமையாற்றுவார்கள்.

இந்நியமனங்களின் அடிப்படையில் மிகத்திறமையான சுகாத்ர சேவையை நாட்டு மக்களுக்கு வழங்க முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

(ற-7)

# தேயிலை ஏற்றுமதிக்கு புதிய நடவடிக்கை

(கொழும்பு)

தேயிலை ஏற்றுமதிக்கு ஏற்ற வகையில் அவற்றின் தரத்திற்கான சான்றிதழ் வழங்கும் திட்டம் ஒன்றை இலங்கைத்தேயிலை உற்பத்தியாளர் சங்கம் அமுலாக்கவுள்ளது.

இச் சான்றிதழ் வழங்கும் திட்டம் விஸ்தரிக்கப்படுவதற்கு அரசாங்கம் உதவி வழங்கவுள்ளது.

தேயிலை உற்பத்தி,ஆராய்ச்சி,தேயிலை பொதி செய்யும் பைகள் ஆகியன தொடர்பாகவும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட விருக்கின்றன.

காலக்கிரமத்தின் பாவனையாளர்கள் மத்தியில் தேயிலைப்பாவனையை மேம்படச்செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பெருந்தோட்ட அமைச்சின் ஊடகப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ற-7)

'இலங்கை மீது தப்பபிப்பிராயம் வேண்டாம்'

# தேசிய பிக்குகள் முன்னணி ஷாருக்கானுக்கு அறிக்கை

(கொழும்பு)

அண்மையில் ஹிந்தி திரைப்படக் கலைஞர்கள் கலந்து கொண்ட இலவச நிகழ்ச்சியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவமானது குறித்த அரசியல் கட்சி ஒன்று மேற்கொண்ட சதிமுயற்சியே என தேசியபிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

அத்துடன் இம் முன்னணி ஒரு அறிக்கை ஒன்று தயாரித்து அதனை நடிகர் ஷாருக்கானிடம் கையளிக்குமாறு இந்திய உயர் ஸ்தானிகர் நிருபமா ராவிடம் கையளித்தனர்.

அதில் சிங்களவர்களோ தமிழர்களோ முஸ்லிம்களோ ஷாருககானிடம் எதுவித குரோதத்தையும் கொண்டிருக்கவில்லை. சகல இலங்கை மக்களும் டிசம்பர் 11 அன்று நீங்கள் வருவதை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தனர் எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேலும், சோமதேரரின் முதலாமாண்டு நிகழ்வானது தங்களின் இசை நிகழ்ச்சிக்கு ஒரு தடங்கலாக இருக்கவில்லை சில கட்சிகள் தங்களின் இசை நிகழ்சியைத் தமது குறுகிய அரசியல் சுய இலாபங்களுக்காகப் செயற்படுத்த முயன்றுள்ளனர். எனக் குறிப்பிட்டுள்ள பிக்குகள் முன்னணி மேற்படி கசப்பான சம்பவத்தை அடுத்து இலங்கை மீதும் இலங்கை மக்கள் மீதும் எதிர் மறையான எண்ணத்தை வளர்த்துக் கொளள வேண் டாம் எனக் குறிப்பிட்டிருந்தது. (ற-6)

# அமெரிக்கத் தூதுவர் 28இல் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து அறிந்து கொள்ளும் பொருட்டு இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜெப்ரி லன்ஸ்டெட் எதிர் வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் ஆகியோரைச் சந்தித்துக் யாழ்.மாவட்ட நிலைப்பாடுகள் குறித்து கேட்டறியவுள்ளார். (ற-5)

# மட்டு.-கொழும்புக்கு இடையில் கடுகதி ரயில்சேவை ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்புக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் கடுகதி ரயில் சேவை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கென மருதானை ரயில்வேயாட்டிலிருந்து கொழுமபுக்கோட்டை வரையிலான புதிய பாதை ஒன்றை போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ்பெரேரா திறந்து வைத்தார்.

அவர் வைபவத்தில் உரையாற்றுகையில்,இந்த ரயில் சேவை ஆரம்பிக்கப்படுவதன் மூலம் கொழும்புகும் மட்டக்களப்புக்குமிடையிலான பிராயாணிகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார். (ற-7)

# எந்தச் சவாலையும் எதிர்கொள்ள இராணுவம் எந்நேரமும் தயார்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறந்த தயார்ப்படுத்தல்களுடன் எந்தத் தருணத்தையும் எதிர்கொள்ள இராணுவம் தயார் நிலையில் உள்ளது என இராணுவத் தளபதி லெப்ரினெல்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட சூளுரைத்துள்ளார்.

தியத்தலாவை இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற புதிய உத்தியோகத்தர்களை இராணுவத்துக்கு உள்வாங்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்,

சண்டைக்காலமோ சமாதான காலமோ நாட்டுக்கு எற்படக்கூடிய எந்த அச்சுறுத்தலையும் சமாளிக்கும் வகையில் இராணுவம் எந்நேரமும் சிறந்த தயார் நிலையில் இருக்கவேண்டும்.

இந்தத் தேவையை நிறைவேற்றுவதற்காக இராணுவத்தினருக்குச் சிறந்த பயிற்சி அளிக்கப்பட வேண்டும் படைகள் உஷார் நிலையில் பேணப்பட வேண்டும் தமக்குக்கீழ் பயிற்சி பெறுபவர்க்ளுக்குச் சிறந்த பயிற்சியையும் தலைமைத்துவ நன்னெறியையும் போதிக்கவேண்டிய பொறுப்பு இராணுவக் கட்டளை அதிகாரிகளுக்கு உள்ளது. என்றும் கூறினார். (ற-8)

# விசனம்

(பொலிகண்டி)

வடமராட்சியில் உள்ள சில பிரதேசங்களில் இளைஞர் குழுக்களின் அட்டகாசங்கள் அதிகரிக்கிறது. இது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ப-106)

ௐ

# தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்

கிறிஸ்தவ மதத்திலிருந்தும், போதகரின் வாழ்க்கையிலிருநதும் நான் அறிந்து கொண்டது இதுதான் கடவுள் உள்ள இடத்தில் வேறு எதுவும் இல்லை. உலகம் உள்ள இடத்தில் கடவுள் இல்லை ஒளியும் இருளும்போல் இவை இரண்டும் ஒரு போதும் இணைவதில்லை எல்லா முனிவர்களும ஆச்சாரியர்களும் போதிப்பது இது தானே

சுவாமி விவேகானந்தர்

## சர்வதேச நீதிமன்றத்துக்கு எஸ்.பியின் விவகாரம்

# ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மானத்திற்கு முன்னணி சட்டத்தரணிகள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கிய பிரமுகரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி. திஸநாயக்கவின் விவகாரத்தை சர்வதேச நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லும் ஐக்கிய தேசியக்கட்சியின் தீர்மானத்திற்கு நாட்டின் முன்னணி சட்டத்தரணிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் மேலாண்மை மிக்க நீதி மன்றமான உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை எந்த ஒரு நீதி மன்றமும் மீள் கேள்விக்கு உட்படுத்த முடியாது என ஜனாதிபதி சட்டத்தரணி டி.பி.மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

தனது தீர்ப்பை மாற்றும் வல்லமை உயர் நீதி மன்றத்திற்கு கூடகிடையாது எனவும் அவர் கூறினார்.

வழக்குரைஞர் மகிந்த நிலப்பாவென இது தொடர்பாககருத்துத் தெரிவிக்கும்போது,

1972ம் ஆண்டிற்கு முன்னர் உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை மாற்றியமைக்கும் அதிகாரம் பிரிட்டன் பிரபுக்கள் சபைக்கு இருந்தது.

தற்போது குடியரசுக்கான அரசியல்யாப்பு அங்கீகரிக்கப்பட்டு இருப்பதால் அதன் தீர்ப்பிற்கு எதிராக யாரும் சவால் விடமுடியாதுதெனக் கூறினார்.(ர-7)

---

## மட்டு...

நொச்சிக்கு வருகை தரவில்லை.

இவ் விவகாரம் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பல்வேறு தரப்பினருடனும் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பெண்போராளிகள் கறுப்பு நிற இடுப்புப் பட்டி அணிந்து பயணம் செய்வதற்கு இராணுவம் தெரிவித்த எதிர்ப்பு காரணமாக எழுந்துள்ள பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமையினாலேயே நேற்றைய பயணத்தில் பெண் போராளிகள் இடம் பெறவில்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (ச)

---

## நிரந்தர சமாதானம்...

கடந்த மூன்று ஆண்டுகளாக நிரந்தர சமாதானம் மலர்வதற்கு நாம் காத்திருக்கிறோம். எமது இந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்காகப் பெருமளவு ஆயத்த வேலைகளை கடந்த மூன்று வருடங்களில் நாம் செய்திருக்கின்றோம். முன் எப்பொழுதையும் விட சமாதானம் மிகவும் அண்மித்தவிட்டது என்றே நான் நம்புகிறேன் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாம் பின்பற்றும் மதங்கள் எம்மைப் பிரிக்கும் காரணிகளாக இருக்கக் கூடாது. சமாதானத்திற்காக எம்மை ஒன்றுபட வைக்கும் சக்திகளாக பௌத்த, இந்து கிறஸ்தவ, இஸ்லாமிய மதங்களின் புனிதப் போதனைகள் இருக்கட்டும். எல்லாம் வல்ல ஆண்டவனின் ஆசிகள் எம்மீதும் எமது நாட்டின் மீதும் சமாதானத்தை ஏற்படுத்துவதாக உங்கள் யாவருக்கும் மகிழ்ச்சி நிறைந்தநத்தார் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என அவரது நத்தார் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

---

## பேச்சுக்கு தெளிவான...

நிரல் ஒன்றை முன்வைக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எரிக்சொல் மூலம் அரசு சமர்ப்பித்த பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான நிகழ்ச்சி நிரல் யோசனையில் தெளிவற்ற தன்மை காணப்படுவதாகவும், நம்பகத் தன்மையற்ற நிலைமை காணப்படுவதாகவும் ஒழுங்குபடுத்தப் படாத தன்மை இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ள விடுதலைப் புலிகள் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட தெளிவான, இசைவிணக்கமுள்ள, ஆக்கபூர்வமான நிகழ்ச்சி நிரல் ஒன்றை முன்வைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் மூலம் அரசுக்கு உத்தியோக பூர்வமாக அறிவுறுத்தியுள்ளார் என்று விடுதலைப்புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாக இடைக்கால தன்னாட்சி அதிகார சபை கோரிக்கை பேச்சுக்கள் இடம்பெற வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் இதன் போது வலியுறுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

---

## மூன்றாவது...

நேசன் மற்றும் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை கடந்த 20 ஆம் திகதி சாவகச்சேரியிலும் 22 ஆம் திகதி கைதடியிலும் மனித சங்கிலிப் போராட்டம் உணர்வுபூர்வமாக மேற்கொள்ளப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-19-05)


நாதன்ஸ் சினிமா (யாழ்ப்பாணம்) (குளிரூட்டப்பட்டது)
கா.நே:- 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
மம்முட்டி, நந்திலால்தாஸ் நடித்த
விஷ்வ துளசி

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00 2.45 6.00 (பு.நே)
தனுஷ், தீபா நடித்த
ட்ரீம்ஸ்
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 3.45 (பு.நே)
THE MUMMY RETURNS

ராஜா, யாழ்ப்பாணம்
சில தினங்கள் மட்டும்
சரத்குமார், வடிவேல், நிகிதா
நடிப்பில்
ஐதுமதி
காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும் (பு.நே)


## நல்லூர் பிரதேச சபை

### சந்தைக்கடைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் – 2005

01.01.2005ம் திகதி முதல் 31.12.2005ம் திகதி வரையான காலப்பகுதிக்கு பின்வரும் சந்தைக்கடைகள், இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி கோரப்படுகின்றது.

| சந்தைக்கடைகள், இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற் தவிர்ந்தது) |
|---|---|---|---|
| கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500/= + 75/= (vat) | 5000/= | 168512/- |
| கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 500/= + 75/= (vat) | 5000/= | 66300/- |

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி:- 30.12.2004ம் திகதி வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிவரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 31.12.2004ம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணிவரை

கேள்வி திறக்கும் திகதி:- 31.12.2004ம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணி

மேற்படி கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை காரியாலய நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
24.12.2004.

(c-916)

பொன்னையா வைரமுத்து,
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

---

# நிரந்தர சமாதானம் ஏற்பட ஒன்றிணைந்து செயற்படுவோம்

### நத்தார் செய்தியில் சுனில் தென்னக்கோன் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

உலகெங்கும் வாழும் கோடிக்கணக்கான கத்தோலிக்க மக்கள் கௌரவத்துடனும் பக்தியுடனும் சந்தோசத்துடனும் இயேசு பிரான் பிறப்பை கொண்டாடும் நத்தார் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் வாழும் கத்தோலிக்க பக்தர்களுக்காக நத்தார் வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை நான் பெரும் பாக்கியமாக கருதுகின்றேன்.

இவ்வாறு யாழ் மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.பி. சுனில் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இவ்வுலகில் உதித்த சகல மதத் தலைவர்களும் போதகர்களும் தர்மத்தையே போதனை செய்தார்கள். அதைப்போல் இயேசுபிரானும் இவ்வுலகில் உதித்த நாள் முதல் அயலவரை நேசியுங்கள் அடுத்தவர்கள் மீது இரக்கப்பட்டு கருணை காட்டுங்கள் என்று போதனை செய்தார். மனித சமுதாயத்தில் கலவரங்கள் வன்செயல்கள், இரத்தக்களரி மற்றும் போராட்டங்கள், புரட்சிகள போன்றன இடம்பெற்ற காலத்திலேயே இயேசு பிரான் இவ்வுலகில் பிறந்தார். அன்று முதல் அவர் போதித்ததும் சமாதானத்தின் பெறுமதியே இவ்வுலகில் அமைதி இல்லாத இடத்தில் வாழமுடியாது என்பதை அவர் அப்போது அறிந்திருந்தார் அதனால்தான் சமாதான குமரன் என்றும் அவரை நாம் அழைக்கிறோம்.

அவர் தனது நத்தார் வாழ்த்துச்செய்தியில், சமாதானம் என்ற வார்த்தை இன்றைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு வார்த்தையாக இல்லாமல் அதை நிரந்தரமாகிக் கொள்ள சகலரும் கடமையுடன், பொறுப்புடன் ஒன்றிணைந்து செயல்படுவோம். இன்றைய நத்தார் தினத்தில் சகலரின் மத்தியிலும் ஒற்றுமை ஏற்பட்டு நிரந்தர சமாதானம் உருவாக மனமார பிரார்த்தனை செய்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார். (இ)

---

## 14 இந்திய...

அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்படையினர் இவர்களை இந்திய கடற்படை அதிகாரிகளிடம இந்திய கடலோர எல்லையில் ஒப்படைக்கவுள்ளனர். (இ-8)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் கொட்டடி சன சமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு தலைவர் இரா. செல்வவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச)

## ஆரம்ப வைபவம்

(கரவெட்டி)

கரணவாய் முதலைக் குழியில் அறநெறிப்பாடசாலை ஒன்று இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

அகில இலங்கை 'சைவன்' நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் ஆரம்பமாகும் இப்பாடசாலையின் ஆரம்ப விழாவில் கரவெட்டி பிரதேசசெயலர் சி.சத்தியசீலன் கலந்து கொண்டு பாடசாலையை வைபவரீதியாக தொடக்கிவைப்பார்.

பாடவிதான முறைகளை கரவெட்டிப்பிரதேச கலாசார உத்தியோகத்தர் செல்வி. சே. செல்வ சுகுணா ஆரம்பித்து வைப்பார். (ப-101)


2004 O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறி

Diploma in Visualize Management

Computer fundamentals, GUI fundamentals, OS fundamentals, IT fundamentals, Windows Operation, Document management, Print Spooling & job management through MS WORD, Creating and delivering presentation through MS POWERPOINT, Accelerating and amusing accounts through worksheet & Spread Sheet Via MS EXCEL.



காலம் 3 மாதங்கள்

புதிய பிரிவு ஆரம்பம் 29.12.2004

| | |
|---|---|
| கட்டணம் | ~~2500/=~~ |
| சலுகைக் கட்டணம் | 1250/= |

Softview Computer College
www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
scclanka@hotmail.com
T.P: 021 2225170
0777846811


## இறுதிக் கிருத்திய அழைப்பு



10-12-2004 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தந்தை
கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்)

அவர்களது ஆத்மசாந்தி நிகழ்வுகள் 26-12-2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நல்லூர்கோவில் வீதியில் அமைந்துள்ள துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் கலந்து கொள்வதுடன் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நேரில்வந்து அழைப்பு விடமுடியாமைக்கு வருந்துகிறோம். மன்னியுங்கள்.

திருவள்ளுவர் அச்சக நிலையம்
593, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இங்ஙனம்,
மக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள் சார்பில்
சோ.விமலன்.

(9137)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலன்னை அவர்களது அச்சகத்தில் 25.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.